
உ

சிவமயம்













# தடம் போற்றி

## அட்டையில் ...

எமது அன்னை

ஆன்ம பலம் பெற்ற

அறம் இயற்றிய

என்றும் எமது போற்றுதற்குரிய

அவருடைய வாழ்வின் தடங்கள்:

சிற்பனை முருகன் ஆலயம்

சங்குதறை ஞானவைரவர் ஆலயம்

சைவப்பிரகாசம்

ஆலம்புலம் - பிள்ளை பிராயத்து வாழ்விடம்

இல்லறம் காத்த இல்லம் .

உ
சிவமயம்



வேலணை மேற்கைப் பிறப்பிடமாவும்
கனடாவில் வாழ்ந்து வந்தவருமான

# அமரர். திருமதி இராசாம்பிகை இராசலிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவு மலர்

# தடம் போற்றி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து

தமது குடும்பத்தார்க்கும், உற்றார், உறவினருக்கும்

முன்மாதிரியாக இருந்து

அனைவரையும் அரவணைத்துக் காத்த

எம் தெய்வத்தாய்

அமரர் இராசாம்பிகை இராசலிங்கம் அவர்களின்

திருப்பாதங்களுக்கு இவ்வஞ்சலி மலர்

**சமர்ப்பணம்**

உ
சிவமயம்



இகம் : 22. 12. 1929 பரம் : 25. 04. 2020

## திதி வெண்பா.

ஆண்டிரண் டாயிரத்(து) ஈர்பத்துச் சித்திரை
காண்இருபத் தைந்துடனார் கார்சனியே – ஈண்டுவளர்
அக்சயத் திருதியையே இராசாம்பிகை அம்மா
மிக்குயர்த் திதியென்றே தேர் !



# தேவாரம்

## பஞ்சபுராணம் ஓதுதல்

திருக்கோயில்களில், பூசையின் போது "பஞ்சபுராணம்" ஓதுவது வழக்கம். பன்னிரு திருமுறைப் பாடல்களிலே ஐந்து பாடல்களை தேர்ந்தெடுத்து ஓதுவதே பஞ்சபுராணம் ஓதுவதாகும். அவற்றை ஓதும் வரிசைக் கிரமம் பின்வருமாறு

1. தேவாரம் 1,2,3,4,5,6,7 திருமுறைகளில் ஏதேனும் ஒரு திருமுறையின் பாடல்
2. திருவாசகம் 8 ஆவது திருமுறை – ஒரு பாடல்
3. திருவிசைப்பா 9ஆம் திருமுறை - ஒரு பாடல்
4. திருப்பல்லாண்டு 9ஆம் திருமுறை – ஒரு பாடல்
5. பெரிய புராணம் 12 ஆம் திருமுறை - ஒரு பாடல்

இவற்றை ஓதிய பின் அருணகிரிநாத சுவாமிகள் அருளிய திருப்புகழ் பாடல் ஒன்று ஓதி

"வான் முகில் வழாது பெய்க" என்ற கந்தபுராண வாழ்த்து பாடி நிறைவு செய்வது வழமை.

சமய நிகழ்வுகளில் விநாயகர் துதியுடன் ஆரம்பிப்பது வழமை.

## பிள்ளையார் துதி

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடிபோற்றுகின்றேனே.

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும்
அளியானைக் கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும்
மற்றவன்தாள் நண்ணுவதும் நல்லார் கடன்.





# முதலாம் திருமுறை

## திருஞானசம்பந்தர் தேவாரம்

### தலம் திருப்பிரமபுரம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

### தலம் திருமருகல்

அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங் காட்டங்
குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடும் கணபதி யீச்சரங் காமுறவே.

### தலம் திருப்பழனம்

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியி னுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பா வெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழன நகராரே.

## இரண்டாம் திருமுறை

## திருஞானசம்பந்தர்தேவாரம்

### தலம் திருமருகல்

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே.

### தலம் பொது
### சிறப்பு கோளறு பதிகம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன்
வெள்ளி சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

### தலம் திருவலஞ்சுழி

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே.



## மூன்றாம் திருமுறை

## திருஞானசம்பந்தர்தேவாரம்



### தலம் திருவாவடுதுறை

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா
றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே.

### தலம் திருக்கழுமலம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

### தலம் திருஆலவாய்

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயர னிற்கவே.

### தலம் திருக்கோணேஸ்வரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரே.



## நான்காம் திருமுறை

## திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்

### தலம் திருவதிகை வீரட்டானம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

### தலம் திருவையாறு

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான்
மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவாரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன
கண்டேன் கண்டே னவர்திருப்
பாதங் கண்டறி யாதன கண்டேன்.

### தலம் திருவதிகை வீரட்டானம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம்என் னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

## ஐந்தாம் திருமுறை

## திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்

### தலம் பொது

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

### தலம் கோயில் (சிதம்பரம் தில்லை )

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

### தலம் திருமறைக்காடு

பண்ணின் நேர் மொழியாள் உமை பங்கரோ
மண்ணினார் வலம் செய்ம் மறைக்காடரோ
கண்ணினால் உமைக் காண கதவினைத்
திண்ணமாகத் திறந்து அருள் செய்ம்மினே.



## ஆறாம் திருமுறை

## திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்

### தலம் திருவாரூர்

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்.
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

### தலம் திருப்பூவணம்

வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழையோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழும் திருமுடியும் இலங்கித்தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே.

### தலம் திருவானைக்கா

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார் எம்மாடு
சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவர் இல்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக்கா உடைய செல்வா என்றன்
அத்தா உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டு அடியேன் என்செய்கேனே.

## ஏழாம் திருமுறை

### சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

### தலம் திருக்கோளிலி

நீள நினைந்தடியேன் உனை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே.

### தலம் திருமழபாடி

பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழ பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.

### தலம் திருக்கேதீச்சரம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவுள்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக்கேதீச்சரத் தானே.

## எட்டாம் திருமுறை

### மாணிக்கவாசகர் திருவாசகம்

### தலம் திருச்சாழல்

பூசுவதும் வெண்ணீறுபூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால்மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும்பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும்இயல்பானான் சாழலோ.

### தலம் திருப்பெருந்துறை

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள் புரியாயே.

### தலம் சிதம்பரம் தில்லை

கண்களிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்வில் என் வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன்னாடுடை யான்படை யாட்சிகள் பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்துவெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படும் ஆயிடிலே.

## ஒன்பதாம் திருமுறை

### திருமாளிகைத் தேவர் அருளிச்செய்த திருவிசைப்பா

### தலம் சிதம்பரம் தில்லை

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்பமா விளம்பே.

## சேந்தனார் அருளிச்செய்த திருவிசைப்பா

### தலம் திருவீழிமிழலை

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருமாளிகைத் தேவர் அருளிச்செய்ததிருவிசைப்பா

### தலம் கோவில் (சிதம்பரம் தில்லை )

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.



## திருப்பல்லாண்டு

### சேந்தனார் அருளிச்செய்தது

**தலம் கோவில் (சிதம்பரம் தில்லை )**

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றது ஆர்பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழிறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

**தலம் கோவில் (சிதம்பரம் தில்லை )**

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

**தலம் கோவில் (சிதம்பரம் தில்லை )**

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
விம்மி மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## 12 ஆம் திருமுறை

### சேக்கிழார் எழுதிய பெரிய புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவாம்.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி அரு மறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமம் ஆகும் திருச் சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங் கழல் போற்றி போற்றி

ஆதியாய் நடுவுமாகி யளவிலா அளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

### அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

ஏறு மயிலேறி விளையாடு முகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.



முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே.



கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்

கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை கடிதேகும்

மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை

மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே

முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே

முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா

அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி

அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய கந்தபுராணம்

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்தவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்.

சிவபெருமானுக்கு உகந்த இந்த சிவபுராணத்தை தினமும் அல்லது பிரதோஷ நாட்களில் சொல்லி சிவபெருமானை வழிபாடு செய்து வந்தால் துன்பங்கள் பறந்தோடும்.

# சிவபுராணம்

தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்

அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.
கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய் விளங்கு ஒளியாய்
எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரானே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



“கவசம் காக்க“ என இறைவனை வேண்டிக்கொள்ளும் பாடல்களைக் கவசம் என்பர். கவசம்என்றால் நம்மைக் காப்பாற்றக் கூடிய ஒன்று. இங்கு கந்த சஷ்டி கவசம் நம்மைத் தீமைகளி லிருந்தும் கஷ்டத்திலிருந்தும் காப்பாற்றுகிறது. இதை அருளியவர் ஸ்ரீதேவராய சுவாமிகள்.

## கந்த சஷ்டி கவசம்

### காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்–கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும், நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

### குறள்வெண்பா

அமர ரிடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ர ர ர ர ர ர ர
ரிஹண பவச ரி ரி ரி ரி ரி ரி ரி
விநபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சவ்வும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியில் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து

நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொகமொக மொகமொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோ தனென்று
உன் திருவடியை உறுதியென் றெண்ணும்
எந்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க

விழி செவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
முன்கையி ரண்டும் முரண்வேல் காக்க
பின்கையி ரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க

அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறக் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசு காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்

ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெகுண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
குலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தனிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்களன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய

அஷ்டதிக் குள்ளோர் அடங்கிலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மற்றவ ரல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெற்றி புனையும் வேலே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்

அனைத்துக் கலைகளுக்கும் அரசியாகிய கலைமகளைப் போற்றும் பாமாலை. சகலகலாவல்லி மாலை என்ற நூலை கருவாக்கியவர் குமரகுருபரர் ஆவார்.

# சகலகலாவல்லி மாலை



### கட்டளைக் கலித்துறை

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே. 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே. 3

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே. 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பாடி
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே. 7

சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே. 8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே. 10

மயக்கத்தில் செல்லும் திசை தெரியாது ஆழச் செல்லும் உயிர்களை உணர்வூட்ட ”கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே” என்ற பொன்னான வாசகத்தால் கைதூக்கி விடுவன திருவெம்பாவை.

## திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகான் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிலோர் எம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக்கென்பாய் இராப்பகல் நாம்
பேசும் போதெப்போது இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பர் யாம் ஆரேலோர் எம்பாவாய். 2

முத்தன்ன வெண்நகையாய் முன்வந்து எதிர் எழுந்தன்
அத்தன் ஆனந்தன் அமுதனென்ற உள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த்தாட் கொண்டாற் பொல்லாதே
எத்தோ நின் அன்புடமை எல்லோம் அறியோமே
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் நமக்கேலோர் எம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளை
கண்ணுக்கினியானை பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயே வந்
தெண்ணிக் குறையில் துயலேலோர் எம்பாவாய். 4

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவறியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய். 5

மானே நீ நென்னலை நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாட வந்தோர்க்கு உன் வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம் கோனைப் பாடேலோர் எம்பாவாய் 6

அன்னே யிவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 7

கோழிச் சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ?
வாழி! ஈதென்ன உறக்கமோ வாய் திறவாய்?
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடு ஏலோர் எம்பாவாய். 8

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீர் அடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் அங்கு அவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம் கணவர் ஆவார்அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய் பணி செய்வோம்
இன்னவகையே எமக்கு எம் கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய். 9

பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்டர் உளன்
கோதில் குலத்தான் தன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண் ஆரழல் போல்
செய்யா! வெண்ணீறு ஆடி! செல்வா! சிறு மருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள்உய்யும்வகையெல்லாம்உய்ந்தொழிந்தோம்
எய்யாமல்காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார் கலைகள்
ஆர்ப்ப அரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்ப
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
எத்தி இருஞ்சுனை நீராடேலோர் எம்பாவாய் 12

பைங்குவளைக் கார் மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலர்ந்தார்ப்பக் கொங்கைகள்
பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடு ஏலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாம் ஆட
சீதப்புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி

சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடி
பேதித்து நம்மை வளர்ந்தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஓரொரு கால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய் ஓவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்ப
பாரொருகால் வந்து அணையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்
வார் உருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி ஏர்
உருவப்பூம்புனல் பாய்ந்தாடலோர் எம்பாவாய். 15

முன்னிக்கடலை சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னம் சிலம்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரிவிலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னியவள் நமக்கு முன்சுரக்கும்
இன்னருளே என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய் 16

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம்பாலதாக்
கொங்கு உண் கருங்குழலி நந்தம்மை கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலம் திகழ்ந்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய். 17

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர் வந்து கார் கரப்பத்
தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாமகல
பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி
கண்ணா ரமுதமாய் நின்றான் கழல்பாடி
பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்தாடலோர் எம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கு அப்பழஞ் சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்எம்
கொங்கை நின் அன்பரல்லாதோர் தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கு இப்பரிசே எமக்கு எம்கோன் நல்குதியேல்
எங்கெழிலன் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய். 19

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரீகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய். 20



# கணவரின் தொகுப்புக்கள்.

அறுபதாம் ஆண்டு மணவாழ் நிறைவுக்கு மேலும் சில மாதங்களே இருந்தவேளை எனது அன்புக்குரிய துணையாள் இல்லறக்கிழத்தி பாசமுள்ள மனையாள் இராசாம்பிகையின் இப்பூவுலக வாழ்வு தன் தொண்ணுறைய் பூர்த்தி செய்து நிறைவானது. தலைவன் தாள்நோக்கிய தன் தொடர் யாத்திரை நடுவே சீவஆத்மாவின் ஒரு இடைத்தங்கல் முகாமே இப் பூவுலக வாழ்வு. இதன் நிறைவில் சீவாத்மாவானது, தான் நிலைத்திருந்த தேகத்தை அதாவது தன் அகலிடத்து அனைத்தையும் மறக்கிறது. இறைவனது ஐந்தொழில்களின் ஒன்றான மறைத்தல் சக்தியால் தன் இறுதி இலக்குக்காக, "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் என்கிற முதல்வரியில் தொடங்கி அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை தன்னை மறந்தாள் என்பதான இடைநடு பதங்களுடன் "தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே" எனமுடிவுறும் தேவாரப்பாடலை பொருளுணர்ந்து பாடி அன்னாருக்கான ஆத்ம வணக்கத்துடன் காலமான என் மனையாள் நினைவு அஞ்சலியாக இதை எழுதுகிறேன்.

"காலமான" என்ற பதம் ஒரு பெயரெச்சம் எனக்கொண்டு மனைவி இப்ப காலம் ஆக அகிவிட்டார் என்ற ்பொருளை கொள்கிறேன். எண்ணம் இல்லையேல் காலம் இருப்பதில்லை, அல்லது இருப்பது தெரிவதில்லை அவரவர் எண்ணம் இருக்கும் வரை அதனுள் குடியிருக்கும் நினைவுகள். மரண நிகழ்வு ஒன்றை இன்னார் தேக வியோகமானார் என்றும் சொல்வார்கள். வியோகம் என்பது இணைதல் என்கிற கருத்தை தருகிறது. ஐம்பூத சேர்க்கை யாலான பூதவுடல் மீண்டும் அதேயிடத்தை அடைவதால் வியோகம் என்றார்கள் போலும். மரணச் சடங்கு கிரியைகள் அல்லது கிறித்தியங்கள் இதே பாணியில் அமைந்திருப்பதை அறிவோம்.

தொண்ணூறு வயதை எட்டியகாலத்தே முதுமைக்கால நோய்தாக்கம் ஆகியவற்றால் நலிந்திருந்த நிலையிலே அவரது உயிரை சில காலத்துக்கேனும் பிடித்துவைக்கப் பாடுபட்டோம். காலம்

அனுமதிக்கவில்லை. கனடாதேசத்தில் வயதான ஒருவரின் மரணநிகழ்வு, பிரிவுத் துயர், அது கூடவே பிரியாவிடை நிகழ்வொன்று போல அமைவது சாதாரணம். இந்தத் தாயாரது நிகழ்வுகள் அவ்வாறாக நடந்தேறுவதற்கு காலச்சூழல் இடம் தரவில்லை. இது ஒரு இயற்கை மரணமே. அப்படித்தான் மரண அத்தாட்சிப்பத்திரம் சொல்கிறது. ஆயினும் மரணித்த நேர காலத்தை, அது ஒரு "காலமல்லாத காலம்" எனப்பெயரிட்டு சொல்ல வேண்டும் போலு ள்ளது. காரணம், இக்காலத்து அவலங்கள் ஏற்படுத்திய அனுபவங்கள். அது எங்கள் மனங்களில் பதியமிட்ட தாக்கம். இதை காலமல்லாத ஒருகாலமென வர்ணிப்பின் அது அகால மரண முமல்ல, பருவம் பொய்த்த காலமுமல்ல. எது எது, எப்ப எப்ப நடக்க வேண்டுமோ, அது அது அப்ப அப்ப நடக்கும். இப்படி தெளி வற்றதோர் வேதாந்த சிந்தனையை விடுத்து நடந்தவற்றுக்கு சில விளக்கம் தந்து எழுதுவதால் மனம் சிறிது ஆறுதலடைகிறது. கடந்த ஓரிரு வருட கால நோய், அதிலிருந்து ஓரளவுக்கேனும் மீண்டு வந்த கதை, அதனால் வளர்ந்த எம் நம்பிக்கை, காலம் அல்லாக் கால மரணம், அது சிதைத்த சோகம். இதனை ஒரு அஞ்சலிப் பதிவாக்கி கொள்ள வேண்டியுள்ளது.

ஓரொருகால் சில நூற்றாண்டுகள் நடுவே, நிகழ்வன உலகப் பேரவலங்கள். இதற்கு ஒப்பான, அதனிலும் மேலானதாக அமைந்து பல இலட்சக்கணக்கில் மனித உயிர்களைப் பலியெடுத்தும் கோடிக்கணக்கை எட்டுமளவுக்கு மனிதத் தொற்றுக் களையும் ஏற்படுத்துகிறது "கொரோணா" என்கிற புதிதாய் முளைத்த நோய். இதன் விளைவாக முழு உலகே முடங்கி இருப்பது வரலாற்றில் இதுவரை இல்லாதவொன்று. ஒருகால் ஓரிரு மாதங்கள் முன்னதாக அதாவது கொரணா நுளைவின் முன்பாக நிகழ்ந்த மரணமென இதைக் கற்பனை செய்து பார்க்கிறேன் தாயே! காட்சிகள் இப்படித்தான் அமைந்து இருக்கும். கண்டங்கள் கடந்து வதியும் பிள்ளைகள் ஓடி வந்திருப்பார்கள். உன்கூடவே பிறந்த அக்காவின் பிள்ளைகள், உற்றார் உறவினர் விசேடமாக உனது பிள்ளைகளின் நண்பர் குழாம் என்று மண்டபம் நிறைந்த

அளவுக்கு கூட்டத்தினர், அத்துடன் சுடர்ப் பந்தங்கள் ஏந்திய கரங்களுடன் உனது அன்புப் பேரப்பிள்ளைகள் புடைசூழ, பூந்தோரணங்கள், மலர்வளையங்கள் நடுவே இறுதி வணக்கத்துக்கான உனது பூதவுடல் மலரஞ்சலியுடன் அல்லவா வியோக நிகழ்வுக்கு எடுத்து செல்லப்பட்டிருக்கும் ஒரு இயல்பான காலமாக இருந்திருந்தால்.

ஆனாலும் ஒரு வாசல் மூடப்பட்டால் இன்னோர் வாசல் திறக்கப்படுமென்ற அடிப்படையில் இவை யாவும் ஓரளவில் வெவ்வேறு வடிவங்களில் நிஜங்கள் நிழலாகவும், நிழல்கள் நிஜங்களாகவும் நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் ஊடாக நடந்தேறியது. இணைய வழியாக, நூற்றுக்கணக்கான உற்றார் உறவினரென மூன்று தினங்கள் மாலைவேளையில் தேசங்கள் தோறும் தத்தமிடத்தில் இருந்தவாறே, தாம் ஒன்றாக ஓரிடத்தே இருப்பதான உள்ளத்தினராக கூட்டு பிரார்த்தனைகள் அஞ்சலி உரைகள் ஆதியன நிகழ்த்தினர். இறுதி நாளில் மண்டபத்தில் பார்வைக்குப் பூதவுடல் மூடிய பெட்டிக்கு உள்ளேதான் இருக்கும் என்பதான தகவல்கள் நிலவிய காலமது. நாளாந்த உலக செய்திகளின்படி ஏனய நாடுகளில் உறவினர் பார்வைக்கேனும் இடம்தருவதாக இருக்கவில்லை. இருந்தபோதிலும் ஊகங்களுக்கு மாறாக கிடைத்திருந்த சந்தர்ப்பமானது சமய குருக்கள் முத லானோர் சகிதம் கிரியைகள் அருட்பாடல்கள் அன்பர்களது மலர்வளையங்கள் பலவும் நிறைந்திருந்த மண்டபத்துள் திறந்து வைக்கப்பட்டிருந்த பூதவுடலுக்கு புனித அபிஷேக நீராட்டலான நீர்த்தெளிப்பு, மலர்மாலை சாத்துதல் அத்தனையும் செய்யும் வாய்ப்பை பிள்ளைகட்கு வழங்கியது. காட்சிகள் அஞ்சல் செய்யப் பட்டிருந்தது. அத்துடன் தமது தாயாரின் உயிர் பிரியும் பொழுதி லேனும் அருகிருந்து பால்வார்த்து நமச்சிவாய மந்திரத்தை உச்சரித்து நெற்றியில் நீறணியும் பேறுகட்கு வாய்ப்புகளற்ற காலச் சூழலால் வெந்த உள்ளத்தரான பிள்ளைகள், தொற்று பரவல் சிந்தனைகளையும் இச்சந்தர்ப்பங்களில் மறந்தவர்களாக,

ஊனொடு உயிர் கலந்த உள்ளத்தினராகி நின்ற காட்சி என் மகளினது ஓலம் ஆகியனவற்றை கணனித்திரையிலே கண்ணுற்ற எனதுள்ளத்தே நெருப்பைதான் வளர்த்தது. நெருப்பாற்றைக் கடந்து நிற்பவர்கள்போல இருந்தது. இன்னொரு காட்சி கையறு நிலையில் அலறல், தேம்பல். இதன்மத்தியில்தான் அமரத்துவ அம்மாவின் தேகமாயிருந்த தேகம் தீயோடு சங்கமமானது. கொரோணாவே உனக்கு தீ மூட்டும் காலத்துக்காக காத்திருக்கிறது இந்த அழகிய பூவுலகு. காலமான தாயாரின் அந்தக்கரணம், புரியட்டகாயம் என்பவை இவற்றை உணருமென எம்முன்னோர் கூறியுள்ளனர்.

காலம் என்பது ஒரு அருமருந்து. அது கவலைகள் துன்பங்கள் அனைத்தையும் மெல்ல மெல்லத் துடைத்துவிடும். இறந்தகாலம் எனப் பெயரானது இதனால் தானோ? பாதித்த மனத்துக்கு உள்ளான என்மகள் தனது தாயினது முக்கிய கடந்தகால சம்பவங்களை தான் ஆவண வடிவில் வைத்திருக்க என்பங்கை எழுதி தருமாறுவேண்டுகிறா. நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும். அதற்கு அப்பாலும் நிலைபெற எழுத்து வடிவமிருக்கும். மகள் ரஞ்சியின் உணர்வை கருதி “நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு”. மாலைக்கருக்கல் அண்மை வரை வந்திருக்கும் எனக்கு தெரியாததா? இது மகளின் விருப்புக்கமைய தெரிந்திருக்காத கடந்த சிலதையும் சேர்க்க வேண்டியுள்ளது.

இரு வருடங்கள் முன்னதான நிகழ்வொன்று. எனது வயது தொண்ணூற்றைந்து வரை அடைந்த காரணம் கருதி கனடாவுக்கு வெளியே வசித்த என் மக்களும் பேரப்பிள்ளைகளும் வருகை தந்து மண்டபம் எடுத்து என் மனைவி சகிதம் பிறந்த தின விழாவை நிகழ்த்தினர். விழா என்ற பதத்துக்கு அர்த்தம் அன்று கிருஸ்ண ஜயந்தி புத்த ஜயந்தி விழாக்கள், என வேறாக கருதப்பட்டதால், என்னுள் இதுவோர் கூச்ச உணர்வைத் தந்திருந்தாலும் இன்று இது

அன்பை பரிமாறும் ஒரு சமூக சடங்கு. இன்றைய கொரோணா சூழ் நிலைக்குள் காலமான தங்கள் தாயாரது இறுதி நிகழ்வுகள் காலத்துக்கேற்ற கோலமானதை எண்ணுங்கால் பிள்கைள் மனதிற்கு இவ்வைபவம் எத்துணை மன ஆறுதலை தந்திருக்கும் என்பதையும் சிந்திக்க வைக்கிறது. இந்த பிறந்ததின நிகழ்விலே மகள் ரஞ்சி தான் பேணி வைத்திருந்த, சுமார் இருபத்தாறு ஆண்டுகள் முன்பு என்னால் எழுதப்பட்ட ஓரிரு கடிதங்களை வாசித்துக்காட்டி தன் உரையை நிகழ்த்தியிருந்தா. அப்போதைய என் தபால் ஒரு ஆவணமாக கருதப்பட்டதோ அதுகருதி பதிலாக பின்வரும் விடயங்களை கண் பார்வைக்குறை மத்தியிலும் கடித வடிவாகவே தருகிறேன்.

அன்புடை மகளே! உனது தாயாரது பிரிவால் வருந்தும் உனது உணர்வுக்கு உருவம்தர எழுதுகிறேன். உனக்கல்ல முதலில் உன் கணவருக்கு. காரணம் உண்டு வார்த்தைகளால் என்னால் வர்ணிக்க முடியுமாயினும் வார்தைக்கு மேலதான ஓன்றுக்கு வடிவம் தருவதாயின் ஒப்பனையாகிவிடும்.

வாழ்க்கை என்றால் என்ன என்பதற்கு வரைவிலக்கணம் வேதகால முதல் சொல்லப்படுகிறது. “நானிலம் யாவுமோர் நாடக சாலையே ஆண் பெண் அனைவரும் அதில் நடிப்பவர்தான், “மறைவும் தோற்றமும் மற்றங்குள” என தொடர்கிறது பழந்தமிழ் பாடலொன்று வாழ்க்கை நிலையாமையை கூறவந்த பாடலாக இருக்கலாம். ஆங்கில கவிஞன் ஷேக்ஸ்பியர் “வாழ்க்கை என்பது ஒரு மூடனால் எழுதப்பட்ட கதை” என்கிறார் என்பதை கேட்டதுண்டு. எம் சித்தர் பெருமக்களும் இதைத்தான் கூறினர். சம்பவங்கள் யாவுமே கனவாய் பழங்கதையாய் போய்விடும் என்பதனாலேதான் தெய்வத்தின் முன்னதாக தென்புலத்தார் வணக்கத்தை வைத்தனர். நினைவு மலரும் உயிர்ப்பிருக்கும் பாடல் வரிகளாக யாப்பணி மாறா விருத்த வடிவில் தோத்திர அமைப்பை போல அமைந்திருந்த காலம் இன்றில்லை.

நான் எழுதுவது சுயவாழ்வின் சுருக்கம் அதற்கு சில மேற்கோள்கள். “ஆசையே அலைபோல நாமெலாம் அதன்மேலே ஓடம்போல ஆடிடுவோமே வாழ்நாளிலே” இது பட்டுக்கோட்டையார் சொன்னது. இதற்கு விதி விலக்கானவர் எவருமே கிடையாது. நாமாகவே இசைந்தும் இணைந்தும் அமைந்த திருமணமான வாழ்வு அலாதியானது. ஆனால் அபூர்வமானது அல்ல. காரணங்களே காரியத்தின் மூலம். இது எமக்கு சாலப் பொருந்தும். “குறையொன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா..”. முப்பத்திமூன்று வருடங்கள் புலத்து வாழ்வு பண்டாரவளையில் ஆரம்பித்து சொந்த கிராமத்தில் நிலையெடுத்து கனடாவில் இருபத்தியேழு வருடங்களில் நிறைவானது. இருவருமாக தொழில் புரிந்தோம். வயல்வரப்பு தோட்டம் துரவென எதையும் விட்டு வைக்கவில்லை. பிள்ளைகள் தாமாகவே விசேட செலவேதுமின்றி படித்து முடிந்ததும் வேலை வாய்ப்பினையும் பெற்று, மூத்த மகளிர் இருவருக்கும் திருமணம் ஒரு மேடையிலல்ல, ஒரு வாரத்தில் நடந்தேறியமை யார் செய்த புண்ணியமோ? சுமாரான எம் வாழ்விலே தேனும் பாலும் ஓடாவிடினும் நிறைமூர்த்தியின் கருணை படகை ஆடவிடவில்லை. போர்கால சுழலுள்ளும் இடம்பட வீடெடுத்தோம். பூரணமான கையோடு அத்தனையும் கைவிட்டு ஓடிவந்தோம் கொழும்பு வரை. பயத்தால் அல்ல யாழ் வைத்தியசாலை செயலற்றிருந்த காலம். அம்மாவின் அவசர சத்திர சிகிச்சைக்காக. இதுவோர் மறக்கமுடியா அரும்பொட்டு நிகழ்வு. இப்படி போர்க்கால கதைகள் என்னுள் பல உண்டு உன்னையும் அம்மாவையும் கொழும்போடு நிறுத்தி யாழ் மீண்டு விட்ட இடத்தில் வேலைகளை தொடர்ந்தேன் ஓராண்டு காலம். அதன்பின்னதாக தீவையும் கைவிட்டு யாழ்பாணத்தில் குடியேறி மீண்டும் இரு வருடமேலாக கொழும்பு. இக்காலத்தில் இடைநடுவில் கைவிட்ட உன் படிப்பு நீடிப்பு, டிப்ளோமா பரீட்சை, வேலைவாய்ப்பு, வேலை இடமாற்றங்கள், வித்தாகவிருந்து முளையான உன் திருமணம் என்று மாதச்சம்பளத்தை எடுத்தவாறே என்தலையீடுகளை நானே வியக்கிறேன்.

கடைசி அத்தியாயம் கனடா வாழ்வு, இருபத்தேழு ஆண்டுகள் நீண்ட இந்நீரோட்டத்தின் கடைசிப்பக்கம் அம்மா

விடயத்தில் நான்கூறும் செய்தி. அது இவரது முதியோர்இல்ல ஆறு வருட வாழ்க்கை. இங்கு நாலு ஆண்டுகள் சீராக ஓடிய நிலை, டிமென்சியா எனும் இதுவரை மருந்தே கண்டுபிடிக்காத நோய்தாக்கம். வைத்திய நிபுணர்களின் கருத்து இவர் வாழ்நாள் எல்லை இரு வாரங்கள் கூடினால் இரு மாதங்கள் என சொல்லப்பட்டும், சுமார் பதினெட்டு மாதங்கள் வரை நீடித்து வர எமக்குள் நம்பிக்யையும் வளர அது கொரோணா காலத்தால் சிதைவானது. இந்த கால நீடிப்பின் பங்காளிகள் பலர். இதில் நாம் அல்லாத ஏனையோர்க்கு தெய்வ ஆசி கிடைக்க வேண்டுகிறேன்.

தாம்பத்திய வாழ்வின் இறுதிப்பகுதி முதுமை அது நிறைவின் பொலிவு. ஒருவரில் ஒருவர்தங்கி அல்லது தாங்கி வாழும் உரித்துடமை நிறைவுடமை. இப்பருவத்தின் காட்சி இளமையில் தன்னையே மையமாக கொண்டு திருமணமான பின் மணந்தவரை சுற்றியதாகி, பின்னால் இருவருமாக பிள்ளைகளைச் சுற்றிவிட்டு இந்த வட்டம் இறுதியில் முதுமையில் மட்டுமே தமக்கு ஆதரவு மற்றவர்தான் என்பதில் முடிவுறும். கனடா தேசத்தில் இதற்கு வாய்ப்பு அதிகம். என் மனையாள் இயல்பு இதை நாடவில்லை. நோயின் தாக்கம் அதிகரிக்கவே முதியோர் இல்லத்தையே நாட வேண்டிய நிலையில் அங்கு என்னாலான பங்கை, கடமையை கைப்பிடித்தவளுக்கு இறுதிவரை செய்தேன் என்பதில் எனக்குள் பூரண திருப்தியுண்டு. இதில் இன்றோர் வெற்றிடம். அதுதான் யாருக்கேனும் ஏதொன்றையாவது செய்யும் வாய்ப்பு இல்லா திருத்தலாகும்.

அடுத்து "வை"யன்னா "செ"னா என விலாசம் கொண்டிருந்த உனது அம்மாவின் தந்தை, உன் தாத்தா அவர்களை விபரிக்க வேலணையூர் சிற்பனை முருகமூர்த்தி ஆலய வரலாற்றுடன் தொடங்குகிறேன். வேலணைத்தீவின் முருகன் கோவில்கள் கரம்பன் கிழக்கு முருகமூர்த்தி கோவில், நாரந்தனை கந்தசாமி, கோவில் சரவணை முருகன் கோவில், பள்ளம்புலம் முருகமூர்த்தி கோவில், வேலணை கிழக்கு வங்களாவடி முருகன் கோவில், வேலணை மேற்கு சிற்பனை முருகமூர்த்தி கோவில் என

நீள்வட்டவடிவாக இருக்கின்றன, இவற்றுள் ஒன்றான சிற்பனை முருகமூர்த்தி ஆலயம் அதன் சுற்றாடலில் வதியும் பக்தர்கள் மற்றும் கந்தபுராணப்படிப்பு, ஆலயவளாக சமீபகால வளர்ச்சி இவற்றால் தனிச்சிறப்பை பெறுகிறது. நூற்றாண்டுகால வரலாற்று தொன்மை உடையது இக்கோவில். இதன் தாபகர் யார் என்பதும் தெளிவாக இருக்காது. எப்பவோ ஒரு மரத்தடியில் ஆரம்பித்து வளர்ந்தவையே ஆலயங்கள். அறப்பணி திருப்பணி புண்ணியம் சிவபுண்ணியம் எனப்படும் வார்த்தைகட்கு ஒவ்வோர் பொருளுண்டு. சிவப்பணிய பலன், சிவனடிசேர்தல் எனவும் அறப்பணி செய்வோர் சொர்க்கம் அடைவர் என்பதும் மெய்யடியார் கூற்று. சொர்க்கம் புகுவோர் நற்பலனை அனுபவித்த பின் மீண்டும் பூவுலகம் திரும்ப வேண்டும்.

சிற்பனை வட்டாரம் என்ற சொல் முன்னர் வழக்கில் இல்லை. சிற்பனை என்ற பெயர் காணி உறுதிகளில் இருக்கிறது. இந்த வயல்கள் யாவும் வைத்தியநாதர் என்பவர்க்கே உரித்தாக இருந்தது. இவர் பூர்வீகம் நயினாதீவு. இத்தீவுக்கு வரலாற்று சிறப்பு உள்ளது என்பதை யாவரும் அறிவர். இங்கு வாழ்ந்த பெரியார்களில் ஒருவர் பெயர் திருவாளர் இராமசந்திரன் அவர்கள். இவரது புதல்வர் ஒருவர் கொழும்பு பிரபல கண்வைத்திய நிபுணர் பரராசசேகர் அவர்கள். மற்றவர் அன்று யாழ்பாணத்தில் காவல்துறை அத்தியட்சகர் அதாவது எஸ்பியாக பணியாற்றிய சுந்தரலிங்கம் அவர்கள். மேலும் இரு புத்திரிகள், அவர்களில் ஒருவர் சந்தனநங்கை கந்தப்பு, கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை அதிபர், சமஸ்கிருத பாண்டித்தியம் உள்ளவர். இராமசந்திரன் அவர்களுக்கும், இமயமலை அடிவார சுவாமி சிவானந்தர் மடலாயத் தொடர்பு இருந்தது. இவர்களுக்கு இனத்தவரே சிற்பனை ஆலய தாபகர் வைத்தியநாதர். கோவில் நிலம் இவருடையதாயிருந்தது. எங்கள் காலத்தில் கோவில் முதலாளி இவரின் வாரிசு வை. செல்லையா அவர்களே.

சிற்பனை முருகமுர்த்தி கோவில் அன்று போல் இன்றில்லை. குடாநாட்டு பிரபல கோவில்கட்கு இணையாக இடப்பெயர்வு காலத்தின் பின்னதாக முழு அளவில் வளர்ந்து

இப்போ நெடிதுயர் கோபுர கட்டுமான ஏற்பாடுகள் இடம் பெறுகிறது. இற்றைக்கு 90–100 வருடங்கள் முன்பு கிராமத்து கோவில்களின் கட்டுமானம் தேர் திருவிழாவேளை பக்தர்களின் நேத்திபொருளான சேவல், கிடாய் மற்றும் பத்துச்சதம் விலையான ஒவ்வோர் ஓடுகளின் விற்பனை ஆகியவற்றில் தங்கி இருக்கும். சிற்பனை ஆலயத்தில் விழாக்கள் நடைபெறாத காலம். இவ்வித வருமான வாய்ப்புக்கு இடமிருக்காது. அதனால்தானோ தனது தாயின் தாலிக்கொடி விற்ற பணத்தில் கோவில்கூரை வேய்ந்த கதையை மகள் இராசாம்பிகை சொல்வதுண்டு. இராசாம்பிகை தாயாரின் பெயர் பூரணம். பூரணம் அவர்களின் தகப்பன் ம.க எனப்படும் புகையிலை வர்த்தகர். அக்காலத்தில் நியைவே தங்க ஆபரணங்களை அணிந்திருப்பவர் என்ற பெருமைக்குரியராக கணிக்கப்பட்டவர்தான் மாமி பூரணம். பிற்காலத்தில் எந்த ஆபரணமும் அணிவதில்லை என்ற கோட் பாட்டை கடைப்பிடித்தவர். இவரின் கணவர் செல்லைய்யர் கந்தர் உடையார் பரம்பரை வந்தவர்கள் எனச்சொல்வதுண்டு. சிற்பனை கோவில் பக்தர்களில் ஒருவரும், ஆலய நிர்வாகத்தில் பெரிதும் ஈடுபாடு உடையவர் வேலணையூர் திரு சே.க நாகையா அவர்கள். இவர் மரணித்த தின வெளியீட்டின் தலைப்பு “கோபுரம் சரிந்தது” என்பதாகும். கோபுரம் எனக் குறிப்பிடப்பட்டது, அப்போ யாருமே நினைத்திருக்கா சிற்பனை ஆலயக் கோபுரத்தையே. அத்தனை ஈடுபாடு திரு. நாகையருக்கு. இவர் புதல்வர் திரு கந்தவேள் அவர்கள் பகவான் சத்தியசாய்பாபா சமாசத்தின் கனடா ஸ்காபரோ மாவட்ட பொறுப்பாளராக இருந்தவர். இவர் திருமணம் நடந்த இடம் இதே சிற்பனை ஆலயம். மணமகள் சுலோசனா மேற்குறிப்பிட்ட பூரணம் அம்மையாரின் சகோதரர் சபாரத்தினம் அவர்களின் பேத்தியர். சுலோசனா தாயார் ஆசிரியை திலகம் என்கிற இலட்சுமிபிள்ளை. இவரை மனையாளாக தேர்ந்தெடுத்த கணவர் நிறை மொழியாளர் திருவாளர் பரமானந்தர் ஆசிரியர். கோவில் வரலாற்றின் அத்திவாரமாக திரு. வை.செ அவர்கள் பெயர் நிலைத்திருக்கும். இவரின் ஒரு மகளான ஓய்வு பெற்ற ஆசிரியை இராசாம்பிகை இவரது நினைவு மலரில் ஆலய வரலாறும் வருவது ஏற்புடையதே.

வேலணை மேற்கூரைப்பற்றி அயலூரது கணிப்பு, “இவர்கள் உடுக்கதுணி இல்லாவிட்டாலும் இடுக்கதுணி வைத்திருப்பார்களாம்”. இதன்பொருள் தலைக்கனத்தை குறிப்பது. குலப்பெருமை மட்டுமே தம் நிதியம் என்றதோர் காலத்தே வேலணை ஆறாம் வட்டாரத்தை எல்லையிடும் வேளை மணியகாரருடன் வாதாடி முதல்குடி மக்கள் வாழ்இடங்களாக வகுத்து எல்லையிட உதவியவர் இதே வை. செ அவர்கள் எனவும் கதையுண்டு. இன்று மேற்கூரில் என் சமகாலத்தவர் எவரும் உயிரோடில்லை. கூடிய காலம் மலைநாடு, பிள்ளைகள் எல்லோரும் பிறந்தவிடம் அதுவே. சிற்பனை ஆலயம், வை.செ சரிதம் எழுதுகிறேன். அவரவர் பூர்வஜென்ம பலாபலன்கள் எவ்வாறு தொழிற்படுகிறதென்பதை யாரும் அறிகிலர். இதேமுருகன் கோவில் வடக்கு வீதியில் ஆண்டு 1957ஆகவிருக்கலாம் திரு வை.செ அவர்கள் எனக்கு கூறியது “தம்பி நான் ஏதோ காரணத்தால் என் நிலை மாறிவிட்டது. அதனால நீங்கள் வதியும் இடத்தில் ஒரு ஆசிரிய தொழிலை மகள் இராசாம்பிகைக்கு ஏற்பாடு செய்து கொடுங்கோ” என்றார். இது எனக்கு இயலுமாயின் 1940ல் பண்டாரவளை கால்பதித்த காலத்தில் எனக்கிருந்த கல்வி தராதரத்துக்கு உதவுவார் இருப்பின் எனக்கே பெற்றிருப்பேன். ஆனாலும் இதைசெய்து முடிக்க வேண்டும் என்று எனக்குள் இருந்தது. இது தொடர்பில் முதல்முறையாக தனது தாய்சகிதம் வந்திருந்தா, மகள் இராசாம்பிகை. அச்சமயத்தில் வெற்றிடம் இல்லாததால் திரும்ப நேர்ந்திருந்தும் நான் மறித்து சிலகாலம் தொண்டர் ஆசிரியையாக வேலைசெய்ய ஏற்பாடானது. இப் பாடசலை கத்தோலிக்க மிசனறிக்கு சொந்தமானது. தலைமை ஆசிரியை அருட்சகோதரி. இவரோ இடமாற்றத்தை விரும்பிய போதிலும் பெற்றார் ஆசிரிய சங்க கடனை அடைக்காமல் மாற்றம் பெற முடியாதிருந்தது. எனவே கடனை அடைக்க பலவழிகளை நாடி முடிவில் பணம் திரட்டி மாற்றம் ஆக்கப்பட்டார். அதேவேளை பாடசாலையில் காலியாக இருந்தது ஆங்கில ஆசிரியப் பதவி. இதை சரிசெய்ய கல்வி திணைக்கள அதிகாரி சம்மதிக்க அவருக்கு

இசைவான நகரசபை பிதா என்பவரின் உதவியால் சம்மதம் பெற்று அதன் பின் கண்டியிலிருக்கும் திருச்சபை வண பிதா அவர்களை அணுகி நியமனம் பெறலாயிற்று. சிலமாதங்களில், தெய்வம் போட்ட கணக்கை யாரறிவர்?.. எனது வாழ்விலும் திடீர் திருப்பம். 1960ல் பண்டாரவளை முருகன் கோவிலில் தந்தையார் முன்னிலையில் எனக்கும் இராசாம்பிகைக்கும் திருமணம். 1961ல் தன் பேரக்குழந்தைக்கு பண்டாரவளை வந்து பேரனார் வை.செ தங்கள் வம்சவழி பெயர் என்று இராசசேகர் என்றே நாமம் சூட்டிச்சென்றார். 1962ல் ஆசிரியப்பயிற்சி கல்லூரி படிப்பிற்கு தாய் செல்ல மகனை நானே பராமரித்தேன் ஏனைய இரு பிள்ளை களுடன் பணியாளர் சகிதம். 1970 வாக்கில் நாலு அறை வீடும் ஒரு ஏக்கர் வளவுமானதை சொந்த இடமாக கொண்டு அருகாமையிலிருந்த தான் படித்த பாடசாலையிலே படிப்பிக்கும் கால மாற்ற வேறுபாட்டினை அறியுமுன்பே பெற்றார் காலமாகி விட்டனர்.

தத்துவமேதை கலாநிதி இராதாகிருஸ்ணன் கூறிவைத்தார். “வாழ்க்கை ஒரு சீட்டாட்டம்” என்றும் அதில் யாவுமே வெற்றிசீட்டாக வந்தால் ஆட்டமாக இருக்காதென்றும். பெற்ற சீட்டுகள் எதுவா யிருப்பினும் நானும் உன் தாயும் எம் பெற்றார் உயிரோடிருக்கும் வரை கஞ்சிவார்த்தவர்கள். என் திருப்பங்கள் அனைத்துமே கண்ணிலான் மாங்காய் விழ எறிந்த மாத்திரைக் கோலுக்கு ஒப்பானவை. கிடைத்தவை குறியால் அல்ல. எனக்கோர் நிலைக்களம் ஆக அறுபது ஆண்டுகள் உடனிருந்த காலமான மனையாள் இராசாம்பிகையிடம் பட்டகடன் செலுத்தியுள்ளேனா? கடன் பட்டது உண்மை. திருமணமானபின் உன் அம்மா புடவை கடைப்பக்கமே போனததில்லை ஆனாலும் பாடசாலையில் தினம் ஒரு சாறி கட்டும் ஆசிரியையாக மாணவர்கள் மதிப்பிட்டு இருந்ததை அறிவேன். எங்கள் காலம் இருள் வெளிச்சம் இடையிலான காலத்தவர்கள் என்பதால் இக்காலத்துக்கு எடுபடா ஒரு கதையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

“அபர்ணா” என்பது அம்பாளின் ஒரு பெயர். இதன்பொருள் பட்டகட்டையை சுற்றி வளரும் செடி என்பதாகும். படரும் செடி வனப்பானாலும் ஆதாரம் பட்டகட்டை. கட்டைக்கு பெருமை, தான் வனப்பின் சுமைதாங்கியென்று. சிவசக்தி தத்துவம் எதுவாக இருப்பினும். ஒருகால் முரண்பாடுகளென வந்திருப்பினும் அவற்றை உரசல் வராது சமாளிக்கும் வல்லமை வெவ்வேறு வடிவங்களில் எம்மிடையே இருந்தாலும், பொறுமையென்கிற நகையணிந்த நங்கையின் இலக்கண மனையாளாக, எதிர்வாதமற்ற துணையாளாக, கரம்பிடிக்க கரம்நீட்டிய இராசமே! நீ நற்கதி அடைவாயம்மா என இறை வணக்கத்துடன் நிறைவு செய்கிறேன்.

ஓம் சாந்தி.

கணவன்

***ச.இராசலிங்கம்***

மேலுள்ள 12 பக்கங்கள் அடங்கிய ஆக்கம், தொண்ணூற்று எட்டு வயதான எமது தந்தையாரால் பார்வைக்குறைபாட்டின் மத்தியிலும் அவராகவே தனித்து, கணனியில் தமிழில் ரைப் செய்து தரப்பட்டது என்பதை இறைநன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தார்.

## உயர்வான நடத்தைக் கோலங்களைக் கொண்ட தையலார்.

நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் உலகு.

குறள்~336

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, இன்று எல்லோரையும் பிரிந்து, விண்ணுலகமேகி நிரந்தர அமைதி பெற்றுக் கொண்ட நல் ஆசிரியர் எமது மாமியார் அமரர். திருமதி இராசாம்பிகை இராஜலிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல பரம்பொருளைப் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

அமரர்.திருமதி.இராசாம்பிகை இராஜலிங்கம் அவர்களின் வாழ்வியல் சிறப்பான பல இயல்புகளைக் கொண்டிருந்தது. உயர்வான பண்புடையவர்.இல்லற வாழ்வில் அன்பால் தனது கணவரையும், பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும், உறவினர்களையும் அரவணைத்து வாழ்ந்தவர்.அவர் கடிந்து பேசியதையோ, உரத்து உரையாடியதையோ கண்டிலேன். மென்மையாக, மெதுவாகப் பேசிக் கருமங்கள் ஆற்றும் வல்லமை மிகக் கொண்டவர்.

அவரது நடத்தைக் கோலங்களை ஆழ்ந்து அவதானித்த போது நல்லாசிரியருக்கு உரிய பண்புகள் அவரிடம் மிக்கிருப் பதனைக் கண்டுள்ளேன்.தனது ஆசிரியத் தொழிலை விருப்புடன் ஆற்றி வந்தார். மாணவர் விரும்பும் ஆசிரியராகவும், மாணவ மையக் கல்வியில் நாட்டம் கொண்ட ஆசிரியராகவும் தமது கடமைகளை ஆற்றியிருந்தார். அவரிடம் கல்வி கற்ற பல மாணவர் இன்று நல்ல நிலையில் உள்ளார்கள்.அவரை மறக்காமலும் நன்றி உடையவர்களாகவும் அவர்கள் உள்ளனர்.

அவரது ஆசிரியத்துவத்தின் சிறப்பை நன்னூலார் கூறிய நல் ஆசிரியர் இலக்கணத்துடன்நோக்குதல் சிறப்புடையது.

உரைக்கப்படும் பொருள் உள்ளத்த மைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை யறிந்து அவனுள ம்கொள
கோட்டமில் மனத்தினூல் கொடுத்தல் என்ப.

இதற்கமைவான தனது தொழில் வாண்மைத் திறனால் ஆசிரியத்துவத்தில் வெற்றி கண்டார்.

அவரது மறைவு எல்லோருக்கும் பேரிழப்பே.அவர் ஆத்மா சாந்தியடைய மகன் செழியன், மகள் துளசி ,மனைவி ராஜி(பாப்பா) ஆகியோருடன் பரம்பொருளின் பாதம் பணிந்து அமைகின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

20.05.2020

மருகர்

***கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன்***

நிறுவுனரும் முதலாவது ஒய்வுநிலை பீடாதிபதியும்

யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி

நாயன்மார்கட்டு, நல்லூர்,

யாழ்ப்பாணம்

## Prayer for spiritual freedom - Mukti Mantra

asato ma sadgamaya
tamaso ma jyotirgamaya
mrtyorma amrtam gamaya

Lead me from the unreal to the real.
Lead me from darkness to light.
Lead me from death to immortality. ~Brhadaranyaka Upanishad

Ohm Shanthi! Shanthi! Shanthi !

Son-in-Law

***S.Skandakumaran***

## இறை துதி பாடி இறைவனை அடைந்த அம்மா

தொண்ணூறு ஆண்டுகள் இப் பூவுலகில் சுக துக்கங்கள், இன்ப துன்பங்கள், ஏற்ற இறக்கங்கள் எல்லாவற்றயும் ஏற்று வாழ்ந்த எம் அன்னை ஒருநொடிப்பொழுதில் மிக நீண்ட பயணம் சென்று விட்டார். அம்மாவின் சாந்தமும் அமைதியும் கலந்த முகத்தை இனி பார்க்கவே முடியாது, குரலை கேட்கவே முடியாது, என்ற துன்பமான நிலையை ஆற்றுப்படுத்துவது, அம்மாவின் நிறைவான நினைவே!

அம்மா ஒரு பூரணமான வாழ்க்கையை வாழ்ந்து முடித்துவிட்டவர். நிறைவு எனும் போது என் நினைவில் வருவது அவரின் தாய்மை என்ற நிலைப்பாடே, தான் பெற்ற இரு குழந்தைகளுக்கு மட்டுமல்லாது, பெற்றெடுக்காத இரு குழந்தை களுக்கும் தாயாக கடமைகளைச் செய்தவர். நினைத்துப்பார்க்கும் பொழுதுதான் தெரிகிறது நான் என் வாழ்க்கைக்கு தேவையான எத்தனையோ பழக்கங்களை அம்மாவிடம் இருந்துதான் பழகி பின்பற்றுகின்றேன் என.

இனிமையாக என் மனதில் இருக்கும் சிறு பிராயநினைவுகளின் சில மீட்டல் இது. சிறுபிராயத்தில் பண்டாரவளையில் நாம் வாழ்ந்த காலமது. யாழ்பாணத்தமிழர், சிங்களவர், இந்தியதமிழர் எல்லோரும் ஒற்றுமையுடன் வாழ்ந்த காலமும் அதுதான். பாடசாலை முடிய ஒரே விளையாட்டு., முற்றங்களில் சமையல் செய்வது, பூமரங்கள் நடுவது போன்ற போட்டிகளும் எம் வயது ஒத்தவருடன் நடக்கும். எனக்கு உதவியாக அம்மாவும் குழந்தையாக மாறி விளையாடுவது என் மனதில் இன்னும் அழியாத கோலங்கள்.

தன் மாணவர்களுக்கு சிறந்த அடித்தளமிட்டு நன்மாணாக்கரை உருவாக்கியதன் மூலம் தன் ஆசிரிப்பணியிலும் முழு நிறைவை பெற்றவர்.

அது மட்டுமல்ல சிறந்த குடும்பத் தலைவியாக தன் கணவருடன் கரம் கோர்த்து வாழ்க்கையை சிறப்புற வழிநடத்தியவர். எந்த கஷ்டங்கள் வந்தாலும் அமைதியாகவும் திறமையாகவும் அதை கையாளும் ஆற்றல் கொண்டவர். ஐயா முடிவு எடுக்க குழம்பிய நேரங்களில் முடிவு எடுப்பதற்கு உரிய ஆலோசனைகளை வழங்கியவர் .

சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன் 2018 இல் அம்மா மிக்க கடுமையாக நோய் வாய்ப்பட்டிருந்த காலம். வைத்தியர்கள் கைவிரித்து காலமும் குறித்து விட்டார்கள். அங்கும் போராடி மீண்டு வந்து அன்புப் பிள்ளைகளினதும், பாசமிகு கணவரினதும், பராமரித்த தாதிகளினதும், உயர் கவனிப்பால் நலமுடன் ஒன்றரை வருடம் வாழ்ந்து கொரோனா என்ற கொடிய வைரஸ் தொற்றால் ஒரே நாளில் விண்ணுலகம் சென்று விட்டார்.

கொடிய துன்பத்தை கொடுக்கும் வைரஸ் கூட அம்மாவிற்கு எவ்வித துன்பத்தையும் கொடுக்காமல் அமைதியாக இறைவனடி செல்ல அனுமதித்தது நிறைவு அன்றி வேறு என்ன.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

அன்புடன்
***இராஜகோகிலம் ஸ்கந்தகுமாரன்*** (துங்கச்சி)
பெறாமகள்

இலங்கை /அமெரிக்கா

# அன்பு அம்மாவிற்கு ஓர் மடல்

குறை ஒன்றும் இல்லாமல் நிறைவாக இறைபதம் அடைந்த அம்மாவுக்கு உங்கள் பெறாமகள் எழுதும் ஓர் மடல்.

ஐயிரண்டு திங்களாய் எமைச் சுமந்து பெற்ற மாதரசி மண்ணுலகில் இருந்துவிண்ணுலகிற்கு ஏகி விட எமக்கு அன்னையாக இறைவனால் அனுப்பப்பட்ட தாயே !

என் குழந்தைப் பருவம் உங்களுடன் மிக மிக அழகானது. மீண்டும் வருமா என ஏங்க வைக்கும் காலங்கள்.

வனப்பு மிகு மலைநாட்டில், உங்கள் கரம் கோர்த்து பாடசாலை சென்றநாட்கள், ஆசிரியர் மகள் என்ற பெருமையிலும், கர்வத்திலும் பாடசாலையின் செல்லப்பிள்ளையாக, வலம் வந்த நாட்கள்,அது உங்களால் எனக்கு தரப்பட்ட பெருமை அல்லவா !

அது மட்டுமல்ல,

“காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு, மாலை முழுதும் விளையாட்டு என்று வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா!” என்று என்னைக் கல்வியில் காதல் கொள்ளச் செய்தவர் நீங்கள்தானே! அன்னையே! மறுக்கமுடியுமா அன்றி மறைக்கத் தான் முடியுமா!

காலச் சுழற்சியில் எங்கள் கல்வி மேம்பாட்டுக்காக மலையகம் விட்டு சொந்த ஊராகிய வேலணை வந்த பின் உங்களோடு நான்தங்கியிருந்த காலம் மிகக் குறுகியது, என்றாலும் உங்களின் ஆளுமையை, நிர்வாகத் திறனை, சற்றும் சளைக்காத போராட்டக்குணத்தை, எனக்கு உணர வைத்தது அந்தக் குறுகிய காலம்தான்.இந்தப் போராடும் குணமே உங்கள் வெற்றியின் இரகசியம் என நான் பின்னாளில் அறிந்து கொண்டேன்.

நான் உங்களிடம் கண்டு வியந்த, இப்பொழுதும் வியக்கும் விடயம் உங்களிடம் இருந்த அயராத உழைப்பும், முயற்சியும்தான்.

பாடசாலை விட்டு வந்தவுடன் வீட்டில் உள்ள வேலைகளை முடித்து, சிறிது ஓய்வும் எடுத்துக்கொண்டு வளவில் உள்ள பயிர்களை பராமரிப்பதிலும் ,தண்ணீர் பாய்ச்சுவதிலும் நீங்கள் கொண்டிருந்த அக்கறை கண்டு உங்களுக்கு அலுப்பே இல்லையா என நினைத்திருக்கிறேன். உங்களின் இந்த உழைப்பு வெண்டி, கத்தரிச் செடிகளாகவும், பாகல், பீர்க்கு கொடிகளாகவும், மாதுளை, கொய்யா மரங்களாகவும் ,எங்கள் வீட்டுத் தோட்டத்தை அலங்கரித் திருப்பதைக் பார்த்து இந்த ஊரி கலந்த மணல்மண்ணிலும், உவர் நீரிலும்இப்படி ஒரு வீட்டுத் தோட்டமா எனப் பிரமித்திருக்கிறேன். முயற்சி திருவினையாக்கும் என்பதைச் சொல்லாமல், செயலால் விளங்கவைத்தவர் நீங்கள்.

இது மட்டுமா,

ஐயா புகையிலை,மிளகாய்த் தோட்டம் என ஆரம்பித்து, உத்தியோகம் ஓர் ஊரில்,தோட்டம் ஓர் ஊரில், என்று அல்லாடிய போது அவருக்கு ஆறுதல் அளித்து,அந்தந்த நேரத்தில் தோட்ட வேலைகளை அதற்கு உரிய ஆட்களைக் கொண்டு செய்வித்து, அறுவடையை வீட்டிற்கு கொண்டுவரச் செய்தது உங்கள் நிர்வாகத் திறமை அல்லவா! இவ்வளவு பம்பரச் சுழற்சியிலும், என்னை வழி நடாத்தி, என்னை கல்வியில் உயர வைத்து எனக்கு ஒரு நிறைவு தந்த தெய்வம் அல்லவா நீங்கள் இந்த நன்றிகடன் எந்த பிறவியிலும் தீராது அன்னையே!

அம்மா எனது மனக்கிடக்கையில் இருக்கும் இன்னுமொரு விடயத்தையும் உங்களிடம் சொல்ல ஆசைப்படுகின்றேன்.

இளவயதிலே, துணிவுடன் இரு பெண்பிள்ளைகளின் தந்தையை கணவராக வரித்த உங்கள்தியாகமும், திடசித்தமும் எடுத்த கடமையை செம்மையாக முடித்த பாங்கும் போற்று வதற்க்கும் வணங்குவதற்கும் உரியது.

அம்மா நீங்கள் ஒரு கருமத்திருதி .

எனது தங்கை ரஞ்சி அடிக்கடி சொல்லும் வார்த்தை “இவ்வுலகில் அம்மா எடுத்துக்கொண்ட பாத்திரம் மிகவும் கடினமானது”

என் தந்தை சொல்லுவார் ”நீங்கள் எல்லோரும் நன்றாக இருப்பதற்கு காரணமே அம்மாதான் ”

இருவரின் கூற்றுக்களுமே சத்தியமான உண்மை அம்மா!

அம்மா நீங்கள், மண்ணை விட்டுபிரிந்தாலும் உங்கள் பிள்ளைகளின் மனதைவிட்டுப் பிரியவில்லை . தெய்வமாக வீற்றிருந்து வழிகாட்ட வேண்டும் என வேண்டி இந்த மடலை முடிக்கின்றேன்.

அன்புடன்

பெறாமகள்

*இராஜாம்பிகை கமலநாதன் (பாப்பா)*

நாயன்மார்கட்டு,நல்லூர்

யாழ்ப்பாணம்.

20.05.2020

## அம்மா - அவர் எங்கள் அம்பிகை

அகிலத்தில் தாயின் அன்புக்குக்கு ஈடு இணை எதுவும் இல்லை என்பதற்கு எடுத்துகாட்டாக வாழ்ந்தவர் எங்கள் அம்மா. அவருடன் ஒன்றாக வாழ்ந்த காலங்கள் குறைவானாலும் அவருடனான பாசப்பிணைப்புகள் அதிகம். அவர் பொறுமையும் சகிப்பு திறனும் மிக்கவர் கோபம் கொள்ளாதவர் அமைதியானவர் அனாலும் காரியத்தில் கண்ணானவர். அவர் இறைவனை நித்தம் நினைப்பவர் பிரார்த்திப்பவர் தன்னுள் பூரணத்தை அடைந்தவர். அவர் ஒன்பது தசாப்தங்களை கடந்து இருந்தாலும் அம்மாவின் பிரிவு அதிர்ச்சியானது் ஆறாத துயரம் ஈடு செய்யமுடியாத இழப்பு. அவர் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

என்றும் உங்கள் அன்பு மகன்,
"தம்பி"
***இராஜசேகரன் இராஜலிங்கம்***

## A tribute to our mother written with tears

Our mother talks less, but loves more and lives in our hearts forever.
You held our hands for a short while, but held our hearts forever.
You took the place of all others, but no one else can take your place.
Your true love is pure, unconditional and warm, the memories we treasure in every moment of our life.
May all the love you have given to us will come back to you with peace.
We always say the least to those we love the best.

May God give you rest and peace.

Your forever loving son,
***Rajasegaran***

## தெய்வத்தாய்

*“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது.”*

அன்புக்கு இலக்கணமாய் அமைத்த அன்னையே! சிற்பனை முருகன் அருள் கடாட்சம் பெற்று பெற்றோர்க்கும், உற்றோர்க்கும் பெருமை சேர்த்த பெருமகளே! கல்வியில் சிறந்து விளங்கி ஆசிரிய பணியை அன்புடன் ஏற்று சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு பாடத்துடன் கதை பல சொல்லி மகிழ்ந்த மாதரசி. அறவாழ்வுடன் அன்பை சொரிந்து இல்லறத்தை நல்லறமாக காத்து குடும்பத்துக்கு குத்துவிளக்காக ஒளிர்ந்தீர்களே! ஆசிரிய கலாசாலையில் இருவருட பயிற்சியை நிறைவாக்கி சேவையை தொடர்ந்தீர்கள்.

ஆசிரிய பணியில் கடமையே கண் என கற்றுக் கொடுத்தீர்கள். கும்புறு புட்டி வைரவர் துணையுடன் அருகாமையில் குடிபுகுந்து கல்விச் சேவையுடன் ஓய்வு நேரத்தத்திலும் மாணவர் களுக்கும், மற்றையோர்க்கும் உதவியாய் இருந்தீர்கள். முப்பது வருட ஆசிரிய சேவையை நிறைவு செய்து பல மாணவர்களின் மனங்களில் நல்லாசிரியர் என பெயர் பெற்றீர்கள்.

உங்கள் தந்தையின் அண்ணன் மகனான என் அப்பாவை இள வயதில் நான் இழந்து, குடும்பசுமை மேலோங்கி நின்ற என்னை உங்கள் குடும்பத்தில் ஒருவனாக்கி எனை உயர்த்தி னீர்களே! தெய்வத்தாயே!!

கனடாவில் கடும் குளிரிலும் வாழத்துணிந்து எங்கள் எல்லோரையும் குறை இல்லாமல் நிறைவாக பார்த்தீர்கள். பேரர்களுக்கு பிரியமாக பாடம் புகட்டி, கதை பல சொல்லி, இறை பக்தியுடன் பண்ணிசை பாடி, பரவசம் அடைந்தீர்கள் அம்மா. வாழ்வு நிலையாமை என்று உணரவைத்து முதுமையிலும் பேரர்களுடன் விளையாடி இன் சொல்லால் எல்லோரையும் கவர்ந்தீர்களே!

எல்லோரிலும் கடவுள் கண்டு கைகூப்பி வணங்கி எப்பொழுதும் இறை நாமத்தையே உச்சரித்து வாழ்ந்தீர்கள். நடக்க முடியாத காலத்தில் முதியோர் காப்பகத்திலும் வழமைபோலவே எல்லோரிடமும் அன்பாக பழகி வந்தீர்கள்.

ஒன்றரை வருடத்திற்கு முன்பாக வைத்தியசாலையில் முதுமறதி (Alzheimer) எனும் நோயால் சாப்பிட முடியாத நிலையில் வைத்தியர்கள் சில நாட்கள் தான் என நாள் குறித்து தந்ததை காலனுக்கு ஒன்றரை வருடங்களாக கதை சொல்லி வென்றீர்களே!

அன்புத்துணைவரின் அகவை தொண்ணூற்றைந்து விழாவில் உற்றார், உறவினர், நண்பர்களை வரவழைத்து கொண்டாடி அப்போதே உங்கள் பிரிய விடையை சொன்னீர்களா? இறுதிப் பயணம் இப்படித்தான் நடக்கும் என அப்போதே நாள் குறித்து வைத்தது அப்போ எமக்கு புரியவில்லையே! தெய்வத் தாயே!!! பேறு பெற்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறை அருளை இறைஞ்சுகின்றோம்.எங்கள் மேல் அளவுகடந்த பாசம் வைத்திருக்கும் உங்களின் பிரிவிலிருந்து ஆறுதல் பெற ஆண்டவன் துணை கிடைக்க பிரார்த்திப்பதுடன், என்றும் உங்கள் நினைவுகளுடன்......

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பு மருமகன் (Son-in-Law),

***கே. எஸ் . கதிர்காமநாதன்***

**கனடா**

## “எனக்கென்னத்துக்கு? ”

25.4.2020 சரியாக ஐம்பத்தைந்து வருடங்கள் எனைக் காத்த தேவதை தன்னிடம் நோக்கிச் சென்றுவிட்டார். ஆயிரம் சூறாவளிகள், சழல்காற்று அத்தனைக்கும் தானே முகம் கொடுத்து எனைமட்டும் பத்திரமாகப் பார்த்துப் பார்த்து ஆர்பரிப்பில்லாக் கடல் தேடி ஓர் அழகிய படகொன்றில் ஏற்றி ஆனந்தமாகப் பயணி என்று விட்டு பக்கமாய் நின்று அழகு பார்த்தவர். ஏற்றி வைத்தபடகில் பக்குவமாப் பயணிக்க வேண்டுமென்று எக்கணமும் எமக்காக இறைவனை வேண்டிய படியே மீதிக்காலத்தையும் கழித்து அமைதி அடைந்து விட்டார். அரைநூற்றாண்டுகள் கடந்து சட்டென்று ஓர் முற்றுப்புள்ளி. அம்மா இல்லாத ஓர் உலகத்தில் நான்.

என்நினைவுகள் பின்நோக்கிப் பின்நோக்கி என் ஐந்து வயதுக்குள் நுழைகிறேன்.எது எனது வீடு? அம்மாவுடன் ஓர் பெரிய வீட்டில் வீடு நிரம்பிய மக்களுடன், எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அது தான் சைவப்பிரகாசம். ஆறு வயதாகியது விளங்குவதற்கு எனது பாடசாலை வேறு, எனது வீடு வேறு என்று ஆனாலும் அம்மா மட்டும் எப்போதும் என்னுடன். முதலாம் வகுப்பில் என் வகுப்பாசிரியர் என் அம்மா. என் அன்னைமடியில் அத்தனை பேரும் சக உதரத்தில் உதித்தவர் போன்றே ஒன்றாக அகரம் படித்தோம். ஏழு வயது, இரண்டாம் வகுப்பு மீண்டும் அவரே வகுப்பாசிரியர். என் அன்னை மடியிலேயே பள்ளிப் பருவம் ஆட்டம்,பாட்டம் குதூகலத்துடன் தொடர்கிறது. மூன்றாம் வகுப்பில் நுழைகிறேன். என் அம்மா இனியும் என்னுடன் ஆசிரியராகத் தொடரமுடியாது.என்னுள் ஓர் இனம் புரியாத ஓர் உணர்வு, இனிவரும் அம்மா எப்படி இருப்பார்? ஆரம்பத்தில் என் அன்னையே ஆசிரியராக அமையப்பெற்றதால் அவர் பின் வந்த அத்தனை ஆசியர்களிடமும் என் அன்னையைத்தான் கண்டேன்.

வயது ஏற ஏற அம்மாவின் பலபரிமாணங்களின் தாற்பரியம் விளங்கியது. என்னை மிகவும் வியக்கவைத்தது அவவின் இறைபக்தி. கும்புறுபிட்டி வையிரவரினதும் சிற்பனை முருகனினதும் தாளினைக் கெட்டியாகப் பற்றியபடியே வாழ்வின் அத்தனை சவால்களையும் எதிர் கொண்டார். வாழ்வு என் அம்மாவிற்கு கொடுத்த பாத்திரம் மிகவும் கடுமையானது, சவால்கள் நிறைந்தது. மிகவும் அமைதியானவராகக் காணப்பட்டாலும் மிகவும் ஒர்மமும் வைராக்கியமும் நிறைந்தவ. தனது காரிங்களைச் சரிவரச் செய்ய வேண்டும் என்பதே அவரின் ஒரே குறிக்கோளாக இருந்தது. இன்ப நுகர்ச்சி (entertainment) என்பது அவரைப் பொறுத்தவரை ஓர் தகாத ஒரு செயலாகவே கருதப்பட்டது. “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்பதே அவரின் தாரகமந்திரமாக இருந்தது.

இது என் தாய் மட்டுமல்ல அன்றைய எம்மண்ணின் தாய்மார்கள் அத்தனைபேரும் இப்படியான வாழ்வியலைத் தான் மேற்கொண்டிருந்தனர். அவர்களைச் சுற்றி பற்பல தளைகள். ஆனாலும் அவற்றை அவர்கள் சட்டை செய்வதில்லை. அதற்கு அவர்களுக்கு நேரமும் இருந்திருக்காது. ஆனாலும் எம் மக்களின் ஊக்கம், உருவாக்கம் எல்லாவற்றிற்கும் ஒவ்வொரு தாயின் தன்னலமற்ற உழைப்புத்தான் முக்கிய பங்கு வகித்தது. பொதுவாக எம்மண்ணில் தந்தையர்கள் வெளி மாகாணங்களில் வேலை பார்பவர்களாகவோ முழுநேர விவசாயத்தில் ஈடுபட்டவர்களாக இருப்பதால் பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு முழுவதுமாக தாய்மார்களிடமே இருந்தது. ஒரு குடும்பம் முன்னேறுகிறது என்றால் அங்கே தாயின் உழைப்பும் தன்னலமற்ற அவர்களின் அர்பணிப்புமே அதிகமாக இருக்கும். பிள்ளைகள், பிள்ளைகள் என்று அவர்களின் வாழ்வின் ஒவ்வொரு மூச்சுமே பிள்ளைகள் தான். எல்லாக் காலங்களிலும் பிள்ளைகளுக்காக பிரார்த்தனை.

அவர்களுக்காகவே விரத அனுட்டானங்கள். பிள்ளைகளை எப்படியாவது படிக்க வைத்து ஆளாக்கிவிடவேண்டும் என்பது மட்டும்தான் அவர்களின் குறிக்கோளும் இலட்சியமும். இதிலும் பெண்பிள்ளைகளைப் பெற்றவர்கள் அவர்களுக்கு நல்வாழ்வு ஒன்றை அமைத்துக்கொடுக்கவேண்டும் என்னும் ஒரே நோக்கிற்காக தங்களின் அனைத்துத் தேவைகளையும் ஒறுத்து, பிள்ளைகளின் திருமணத்திற்காக சேமிக்கத்தொடங்கி விடுவார்கள். இதைப் பெண்ணைப் பிரசவித்த மறுநிமிடமே தொடங்கி விடுவார்கள். அதிலும் தமது பெண்பிள்ளைகளுக்கு வயது வந்ததும் தங்களுடைய சாதாரண அலங்கரிப்பையே நிறுத்தி விடுவார்கள். சதா வியர்வை வழியும் முகம், எண்ணை பிசு பிசுப்பு ,பறட்டைத்தலை கந்தையானாலும் கசக்கிக்கட்டிய தட்டுச் சுற்றுச் சேலை இதற்குள் தான் அந்தப் பேரழகிகள் ஒழிந்திருந்தார்கள்.

இவர்களின் வாழ்வியலை இப்படியான நினைவு மலர்களினூடாக நினைவுகூரப்படுவதின் நோக்கம் ஓர் ஆவணப் படுத்தலையும் தாண்டி இனி வரும் தலைமுறைக்கு இப்படித்தான் எம் தாய்மார்கள் வாழ்ந்தார்கள் என்பதைத் தெரிவிக்கவே. எனதருமைப் பிள்ளைகளே, அன்று அவர்கள் போட்ட உரம் தான் இன்றய உங்கள் செழுமைக்கு அத்திவாரம். அத்தகைய உரம் கொண்ட தாய்மார்களின் மரபணுக்களைக் கொண்ட நீங்கள் பாக்கியசாலிகள். இனி உங்கள் வரும்காலம் வளம்பெற அவர்களின் வாழ்வியலைத் தொடர்ந்தால் மட்டுமே போதுமானது. இத்தருணத்தில் உங்கள் பேத்தி உங்கள் குணநலங்களைக் கொண்டிருப்பதை ஊரார் சொல்லக்கேட்டு பெரிதுவக்கின்றோம்.

எங்கள் தலை முறை எல்லா மாற்றங்களையும் பார்த்த தலைமுறையென்றால் எனது தாயாரின் தலை முறை எல்லாவற்றிற்கும் முகம் கொடுத்த தலை முறை.இது தான் அம்மாவின் 1930 களில் தொடங்கிய வாழ்க்கை

முறை.ஆரம்பத்தில் இளவயதில் இடை இடையே தாண்டவமாடிய வறுமை ஆனாலும் செம்மை, பெண்அடிமைத்தனத்துடன் கூடிய சமுதாயக்கட்டுப்பாடுகள், இத்தனையும் தாண்டி அம்மா உத்தியோகத்தையும் பார்த்தால் எதிர் கொண்ட நெருக்குவாரங்கள். ஊர் வாய், உலை வாய், சீதனப் பேய் மற்றும் பற்பல பேசுபொருட்களில் அவரவர் வாய்க்கு அவல்களாகி, அத்தனையும் தாண்டி எம் அனைவரையும் புரட்டிப் போட்ட இனப்பேரழிவு அதைத் தொடர்ந்த புலம் பெயர்வு.

"புவனம்" மாறிய புலப்பெயர்வு. முதிர்ந்த மரங்கள் வேருடன் பிடுங்கப்பட்டு நாற்று நடப்பட்ட கதை. புலம் பெயர்ந்த அன்னிய தேசத்தில் போராட்டம் மறுவடிவெடுத்தது. குழந்தை குட்டிகளுடன்..வேலை,வெட்டி உன்னைப்பிடி என்னைப்பிடியென .. முட்டி மோதி .. அதைத்தேடி.. இதைத்தேடி .. ஓடி .. ஒடி ... ஓய்ந்து, அரைவாசி முதுமையையும் அடைந்து எதையோ தொலைத்து விட்டோமா? என நிமிர்ந்து பார்த்த போது நீங்கள் முழு முதுமைக்குள் போய்விட்டீர்கள். "முதியோர் காப்பகத்தில்" நீங்கள் "சரியா? பிழையா? இது இந்நாட்டின் வரமா? சாபமா?ஆயிரம் சமாதானம் சொல்லலாம். ஆனாலும் மனம் ஒப்பவில்லை. சூழ்நிலைக் கைதிகள் நாம். குற்ற உணர்வு சீவிய பரிந்தயம் தொடரத்தான் போகிறது. ஆனாலும் தாயே அருகில் நீங்கள் இருந்தபோது நின்று பேச நேரமில்லை. இப்போ உங்கள் கைபிடித்துக் கால் பிடித்து ஆற அமர பேசி இதமாகக் காலம் கழிந்தது. அது ஓர் தனி உலகம் அன்பான தாதியர். யாதும் ஊரை யாவரும் கேளீர் என இன மொழி கடந்து அம்மா எனஅழைக்கும் அன்புள்ளங்கள். ஒத்தவயதினர் உன்கதை, என்கதை, ஊர்கதை என ஓர் மொழியில் பல கதைபேசிக்காலம் கழித்தனர். அம்மா அடிக்கடி சொல்வதெல்லாம் "இங்கே எனக்கோர் குறையுமில்லை உங்களை நினைத்தால் தான் ஏக்கமாக உள்ளது. அது கவனம் இது

கவனம்..ஆயிரம் கவனம் சொல்லி, நினைவும் கனவும் தன் குடும்பமே”.

இவ்வேளையில் இயற்கை மனிதனின் இறுதிக்காலப் பற்றறுக்கும் பணியை கனகச்சிதமாக செய்யத் தொடங்கியது. அறளை என்னும் alzheimer மெல்ல அம்மாவைத் தாக்கத் தொடங்கியது. தன்னை மறந்தாள் தன் நாமம் மறந்தாள் தன் ஊரை உற்றாரை உறவினரை அத்தனையும் மறந்தாள் ஆண்டவனின் திருநாமத்தைத் தவிர. நோயின் தீவிரம் ஒன்றரை வருடங்களின் முன் 2018 Sep உணவுண்ணுதலையும் முற்றாக நிறுத்தி விட்டது. அவசரப்ப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார். வைத்தியர்கள் மிஞ்சிப் போனால் இருவாரமென நாள் குறித்தார்கள். ஓர் இரவு முழுவதும் ஓர் கண் தூங்காமல் நாமிருவரும். வலிதாங்காமல் அரற்றினா. மருந்து மாத்திரைகள் எதுவும் வேலை செய்யவில்லை. அதிகாலை வேளை ”மாசில் வீணயும் நெக்குருகப் பாடினேன்..பலன் கிடைத்தது. திக்கற்றோருக்குத் தெய்வமே துணை ”நாளை எல்லாம் சரிவந்து விடும்” என்று கூறி விட்டு நிம்மதியாகத் தூங்கினா. மறுநாள் நாள் குறித்த மருத்துவம் palliative care இற்கு பதிவு செய்து மரணச்சடங்கிற்கும் ஆயத்தம்செய்யும் படி அறிவுறித்தியது. இங்கே இறைவன் சிரித்திருப்பார் போல, திட்டம் போடும் மனிதனைப் பார்த்து..

அம்மா தன் விதியைத் தானே எழுதினார். எனக்கென்னவவோ அம்மா எமனிடம் சென்று எனக்கோர் அவகாசம் தா. கடமை ஒன்று இருக்கிறது முடித்து வருகிறேன், என்று கேட்டு வாங்கி வந்தார் என்றே தோன்றுகிறது. ஆச்சரியம்தான் ஆனாலும் கண்கூடு அம்மாவின் பொட்டுவைத்தமுகத்தில் நாளுக்கு நாள் பிரகாசம். முதுமையின் உச்சந்தொட்டுக் கொண்டிருக்கும் எனது தந்தையாரின் கைப்பட சமைத்த உணவை

உண்டு கொண்டும், தூரஇருக்கும் மற்ற மகவுகளின் கவனிப்புடனும் வாரம் தவறாமல் சீரடிப் பாதம் தொட்ட மலர்களைச் சூடிக்கொண்டும் நாட்கள் நகர்ந்தன.

சில சமயங்களில் அம்மா ஞானசிருஷ்டி கைவரப் பெற்றுவிட்டாவோ? என்று ஆச்சரியப்பட வைத்தது. நம்ப முடியவில்லைத்தான். அன்று பகல் வேலையில் பொன்ஆபரணம் ஒன்றைத் தொலைத்து விட்டேன் அதுவும் அம்மா வாங்கித்தந்தது ஆனாலும் நாள் முடிவதற்குள் கிடைத்து விட்டது. அன்று மாலை வழமை போல அம்மாவிடம் செல்லும் போது அச்சொட்டாக அவ்வளவைத்தையும் விபரித்தா! ”நகையைத் தொலைச்சுப் போட்டு நீ கவலைப்படுவியோ எண்டு தான் எனக்குக் கவலை,ஆனாக் கஷ்ரப் பட்டு வந்த பொருள் வீணாப்போகாது.”

என்ன சொல்ல? நீங்கள் ஓர் தபசினி. கொக்கை எரித்த கொங்கணவர்களை விட உங்கள் தவவாழ்க்கை வலியது அவ்வளவுதான்! அதுமட்டுமல்ல சில வேளைகளில் பலசிக்கல்களிற்கு விடை காணாமல் குழம்பிய மனதுடன் அம்மாவிடம் சென்றால் அங்கே அம்மனின் அருள் வாக்காக பதில் ஒன்று காத்திருக்கும். பொதுவாகவே எமது கண்களுக்கு இறுதிக் காலங்களில் அன்னை அம்மனாகக் காட்சியளிப்பது அபூர்வ மில்லைத்தான், ஆனாலும் அவரைப் பராமரித்த தாதி யொருவர் கண்ணீர்மல்கக்கூறியது அவரை- அம்மனைக் குளிப்பாட்டி பொட்டுவைத்தது போல் புளகாங்கித உணர்வு தான் எமக்கு ..”

அத்துவைதம்,துவைதம் அறியும் பக்குவம் எனக்கில்லை. அம்மாவின் இறுதிக்காலங்களில் அவ யாவரிலும் இறை கண்டு,நாளும் பொழுதும் கண்ணில் படும் யாரையும் கையெடுத்து வணங்கி நீ கடவுள் நீ கடவுள் என்னும் துவைதநிலையை அடைய அம்மா போன்று பற்றறுத்த பக்குவநிலையை எய்திவர்களுக்கு

மட்டுமே சாத்தியம் போலும். அம்மா அடிக்கடி சொல்லுவா, ”கடவுள் எல்லாவற்றையும் சரியாக வழிநடத்துவார் எல்லாம் ஓர் காரண காரியத்துடன் தான். ஆம் எல்லாம் வகுத்தான் வகுத்தபடியே..”

2020 March கண்ணுக்குத் தெரியாததோர் நுண்ணுயிர் அகில உலகையே ஆட்டிப்டைக்கும் போது நாம் எல்லாம் எம்மாத்திரம்?

எங்கோ இருந்த கொறோனாத் தொற்று நம் வீட்டு வாசல் வரை வந்துவிட்டது. அனைவரும் வீட்டிற்க்குள் முடக்கம். முதியோர் இல்லங்களின் செய்தி கேட்கும் போதெல்லாம் நெஞ்சம் பதைத்தது. ஆனாலும் vedio call களிலும் யன்னல் கண்ணாடியூடாகவும் பார்த்து பார்த்து சாப்பிடுகின்றா பாதுகாப்பாக இருக்கின்றா என்று சமாதானமுற்றோம். விதி வலிது. இக்காலகட்டத்திற்குள் எதற்காகப் பயந்தோமோ அதற்கே முகங்கொடுக்க வேண்டியதாயிற்று.

Apr 24, 2020, தொலைபேசியில் அம்மாவுக்குத் தொற்றென்ற சேதி இடியாக இறங்கியது சரியாக 55 வருடங்கள் முந்தய ஒரே ஒரு நாள் நான் அழ நீங்கள் சிரித்தது. ஐம்பத்தைந்து வருடங்கழித்து அதே நாளன்று நான் அலற நீங்கள் நிரந்தர மௌனத்திற்குள் அடியெடுத்து வைத்துவிட்டீர்கள். எனை ஏற்றிவைத்த விளக்கு அணையவேண்டாமே என்று இரவிரவாகப் பிரார்த்தனை. அறிகுறி காட்டி விட்டது. தூண்டா மணிவிளக்குத் தூண்டுகையில் சட்டென்று அணைந்தது. அதிகாலையில் ஆவி பிரிந்தது.

இறுதிமரியாதை... மண்டபம் நிறைந்த உற்றார் உறவினர் நண்பரகள் சூழ நடக்கவேண்டிய சடங்கு அசாதாரண சுழ்நிலையிலும் ஆகமவிதிப்படி கிரியைகள் அனைத்தும் நடந்தேறியது. ஆயிரம் ஜென்மப் புண்ணியம் ”முகதரிசனம்” முழுமையாகக் கிடைத்தது இவ்அகால காலத்தே. கர்பக்

கிரகத்துள்ளே நின்று அம்மனுக்கு அபிடேகம் செய்த உணர்வு. ஐந்தெழுத்து மந்திரம் ஒலிக்க நிறைவாழ்வு வாழ்ந்த புண்ணியவதி தீர்க்கசுமங்கலியாக ஜோதியுடன் சங்கமமாகினார்.

தலைப்புக்கு வருகிறேன்.. அம்மா அடிக்கடி ஒரு சுருதி லயத்துடன் சொல்லும் சொல் “எனக்கென்னத்துக்கு” இது என்தாயார் மட்டுமல்ல எம் தலைமுறையின் அனைத்து மாதரசிகளினதும், தேமதுரத் தேன்பாயும் ஆழ்ந்த அர்த்தங்கள் கொண்ட வாய்மொழி வாசகம். ஆயிரமாயிரம் அறநூல்களும் எங்கள் வேத இதிகாசங்களும் சொல்வதை பகவத்கீதையும் பௌத்தமும் பகர்வதை இயல்பாகவே…“என்கென்னத்துக்கு மோனை இந்தா..” இவ் அற வார்த்தைகளே இன்று எம்மினத்தை ஈகையின் உச்சம் தொடவைத்துள்ளது .

என் அன்பான உற்றார் உறவினர் நண்பர்களே கட்டி அணைத்து கதற காலம் இடம்கொடுக்கவில்லை. என் எழுத்துக் களையே கண்ணீராக்கி காணிக்கையாக்குகிறேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

உங்கள் அன்பு மகள்
*இரஞ்சிதலெட்சுமி கதிர்காமநாதன்* (ரஞ்சி)
கனடா

## பெரியம்மா

நிமிடமொன்றிற்கு 280 குழந்தைகள் உலகில் பிறந்தவண்ணம் உள்ளார்களாம். அதே வேளையில் இவ்வுலகில் 109 மரணங்களும் ஒவ்வொரு நிமிடங்களும் நடந்து கொண்டிருக்கின்றனவாம்.

ஒரு பூங்காவை கருத்திலெடுத்துப் பாருங்கள். அங்கு ஒவ்வொரு நிமிடமும் 280 செடிகள் முளைக்கின்றன. ஒவ்வொரு நிமிடங்களும் 190 செடிகள் பட்டுவிடுகின்றன. பூங்கா மேன்மேலும் செழித்துக்கொண்டே செல்லும். வாழ்வும் அவ்வாறே. அது செழித்துக்கொண்டே செல்கிறது. தோற்றமில்லாது எதுவும் மறைவதில்லை. தோன்றியதனைத்தும் புதிதாக ஏதோ ஒன்றைத் தோற்றிவித்துவிட்டுத்தான் மறைகிறது. அனைத்தினதும் சுவடுகள் இங்கேயே விடப்படுகின்றன. எதுவும் உண்மையில் மறைவதில்லை.

பிறப்பு இறப்பு என்ற இரண்டு புள்ளிகளுக்கிடையேயான மாயை இடைவெளி எத்தனை அழகாக இருக்கிறது. இந்த இடைவெளியை அழகுபடுத்தல் என்பதுதானே அனைத்திலும் முக்கியமானது.

இயற்கையின் கருணையால் பிறப்பெய்தி இயற்கையின் விதிகளால் முடிவுறும் வாழ்வுப் பிரபஞ்சத்தில் மனித உயிரிகள் மாத்திரம் விசித்திரப்பிறவிகள். பிறப்பின்போது பிறக்கும் யாருக்கும் பிறப்புப்பற்றி பிரக்ஞை இருப்பதில்லை. பிறந்து விடுகிறார்கள். அனால், வாழ்வின் அச்சுறுத்தும் துன்பியல் முடிவு பற்றி எல்லோரிடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட, அல்லது உணர்ந்து கொள்ளப் பட்ட பிரக்ஞை உண்டு.

அச்சுறுத்தும் முடிவு பற்றிய பிரக்ஞையைத் தோற்க டிப்பதற்கான வழிகளில் உன்னதமானது வாழ்க்கையை அழகுபடுத்தல் மாத்திரமே. எம் எல்லோரையும் விட்டுப்பிரிந்து தன் ஆதிப்பிரபஞ்சத்துள் மீள் பிரவேசம் செய்துவிட்ட பெரியம்மாவை எண்ணிப்பார்க்கிறேன். நீண்ட வருடங்களாக எனக்கும் பெரியப்பா பெரியம்மாவின் தொடர்புகள் அற்றிருந்தன.

புலம்பெயர்ந்த வாழ்வுள் வீழ்ந்து தொலைந்தபோன எனக்கு, பெரியப்பா பெரியம்மா கனடாவிற்கு வந்ததன் பின்னரே உண்மையில் மீண்டும் அவர்களின் தொடர்பும் உறவும் கிடைத்தது. பெரியப்பாவின் ஆலோசனைகளுக்கிருந்த அத்தனை பலமும் பெரியம்மாவின் மௌனங்களுக்கிருந்தன என்பதை அறிந்தவர்களில் நானுமொருவன்.

ஒரு விடயம் எனக்கு நேற்றுப்போல் ஞாபகமிருக்கிறது. வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் நான் 5ம் அல்லது 6ம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். வகுப்பில் எனக்கு ஓவிய ஆசிரியையாக பெரியம்மா இருந்தார். அங்கு தமிழ் ஆசிரியையாக எனது நண்பனும் போட்டியாளனுமானவனின் சிறியதாயர் இருந்தார். அவனுக்கும் எனக்குமான போட்டி அழகான ஒன்றாக இருந்தபோதும் அதில் ஒரு தீவிரமுமிருந்தது.

அதாவது எமது வகுப்பில் ஓவிய ஆசிரியை என் பெரியம்மா.தமிழ் ஆசிரியை அவன் சித்தி. மற்றைய பாடங்களுக்கு வேறு ஆசிரியர்கள். பரீட்சைகள் நடந்து முடிந்து விட்டிருந்தன. ஒவ்வொரு ஆசிரியர்களும் அவரவர் பாடங்களுக்குரிய புள்ளிகளை மாணவர்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

எல்லாப்பாடங்களுக்குமான புள்ளிகள் வெளியாகிவிட்டன. நாம் எம்முள் கணக்குப் போட்டு யார் வகுப்பில் முதலாம் பிள்ளை என்பதை தீர்மானித்த வேளையில் அதில் மிகச்சிறிய புள்ளி வித்தியாசத்தில் நானே முதல் இடத்தில் இருந்தேன். ஓவியத்திற்கான புள்ளிகளே இறுதித் தீர்மானத்தை நிர்ணயம் செய்பவையாக இருந்தன. கதை பரவலாக அடிபடத் தொடங்கி யிருந்தது.

இந்த இடத்தில்தான் பெரியம்மாவிற்கு ஒரு பாரிய அழுத்தம் வந்தது.எனக்கு அவர் அதிகம் புள்ளிகள் கொடுத்தால், நீதியாகக் கொடுத்தாலும், அது அவருக்கான ஒரு அவதூறாக மாற்றப்படும். தனது பெறா மகன் என்ற காரணத்தினால் அவர் எனக்குப் புள்ளிகளை அதிகமாக வழங்கினார் என்ற ஒரு குற்றச்சாட்டு அவருக்கு இலகுவாகக் கிடைத்துவிடும். அந்தக் குற்றச்சாட்டை அவர் தவிர்த்திருக்கவே முடியாது.

என்ன செய்வது ? எனது ஓவியம் அவனுடையதைவிட அழகாக இருந்தது. துணிவுள்ள ஒரு ஆசிரியையாக, அறம் மீறா ஒரு பெண்ணாக, நீதியான முறையில், எதிர்விளைவுகளைக் கருத்திலெடுக்காது, அவர் எனக்கு அதிக புள்ளியை வழங்கினார். அதனால் அவருக்கு மறைமுகமான அழுத்தங்களும் "குசுகுசுப்புகளும்" பரிசாகக் கிடைத்தன. ஆனால் நடுநிலையான ஒரு ஆசிரியையான அவர் தன் கடமையை முன்னெடுத்தார். யாருக்கும் அஞ்சவில்லை. தன் மனநீதியில் உறுதியுடையவர்களும், அதற்கான துணிவுடையவர்களும் வாழ்க்கையை அழகுபடுத்துகிறார்கள். அவ்வகையில் வாழ்க்கையை நிறைவு பெற்றதாக மாற்றிவிடுகிறார்கள்.

வாழ்க்கையை, பிறப்பிற்கும் இறப்பிற்குமாக இடைவெளியை அழகுபடுத்துவதற்குத் துணிவும் நேர்மையும் வேண்டும். இவையிரண்டும் தன்னிடம் இருந்ததை பெரியம்மா அந்தத் தருணத்தில் நிரூபித்தார். வாழ்க்கை எப்போதும் போல் ஏற்றங்களையும் தாழ்வுகளையும் கொண்டது. சில வேளைகளில் சூழ்நிலைகளே வாழ்க்கையை வடிவமைத்து விடுகின்றன. வாழ்க்கை ஒரு போதும் அமைதியான ஆறாக இருந்ததில்லை.

இருப்பினுமென்ன வாழ்க்கை அழகானதுதான். வாழ்வின் ஏதோ ஒரு கணத்தில் அதை அழகுபடுத்தியவர்கள் அனைவருமே உண்மையில் அழகானவர்கள்தான். அவர்களின் வாழ்வு முடிவுறுவதில்லை.

நான் தற்போதும் பொழுது போக்காக அவ்வப்போது ஓவியம் வரைகையில் இந்த விடயம் என் மனதில் வந்துபோகும். நான் ஓவியம் வரையும் போதெல்லாம் இன்னமும் எதிர்காலத்தில் பெரியம்மாவை நினைந்து கொள்வேன்.

அவரது ஆத்மா சாந்தியடையட்டும்.

பெறாமகன்
***க. வாசுதேவன்***
14.06.2020.

## கண்ணீர் அஞ்சலியும் ஆத்ம சாந்தியும்

இயற்கை எய்திய எனது பெரிய தாயார் இராசாம்பிகை இராஜலிங்கம் ( கனடா ) அவர்களுக்கு எனது ஆத்மா அஞ்சலியை காணிக்கை ஆக்குகிறேன்

பெரியம்மா ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவர் பிரிவால் துன்பமடையும் பெரியப்பா ( இராசலிங்கம் ) அவர் குடும்பங்கள் பெரியக்கா (இராஜகோகிலம் அமெரிக்கா) பாப்பாக்கா (அவுஸ்ரேலியா ) சேகர் அண்ணா ( கனடா) ரஞ்சி ( கனடா) இவர்கள் மன அமைதிக்காகவும் இறைவனை வேண்டுகிறேன்

ஒருநாள் இவ்வழியே என்று விதியிதுவே என்றுறைவோம் வாழிய உன் புகழே.

தம்பி *கனகசபை குடும்பம் பிள்ளைகள்*,
திருமதி திருக்கேஸ்வரி கனகசபை
வாசுகி வாசுதேவன் வசந்தி வாகீஸ்வரி வாசவன்
குடும்பங்கள்

# இதயத்தில் வாழும் அம்மம்மா

எங்களது அம்மம்மா அமரர் இராசாம்பிகை இராசலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திகின்றோம்.

அம்மம்மாவை நேரில் காணும் பாக்கியம் எனக்குக் கிடைக்காதது எனது துர்ப்பாக்கியமே.ஆனால் அவரைப் பற்றியும் அவரது குண நலன்கள் பற்றியும் எனது துணைவியாரும் அம்மம்மாவின் பேர்த்தியாருமாகிய துளசி மூலமாகவும் எனது மாமியார் மூலமாகவும் பல நல்ல விடயங்களை அறிந்து கொண்டிருந்தேன். ஆதலால் அவரை நேரில் காண ஆவல் கொண்டிருந்தேன்.ஆனால் அவரைக் காணும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் என் மனதில் இருந்தது.இன்னும் அந்த ஆசை நிறைவேறாமலே அவர் எமை விட்டுப் பிரிந்து சென்று விட்டார்.

கண்களில் தென்படும் சிலர் இதயத்தில் இடம் பிடிப்ப தில்லை.இதயத்தில் இடம்பிடித்த பலரை நாம் நேரில் காண முடிவதில்லை. எங்கள் இதயத்தில் நிரந்தரமாக இடம் பிடித்த அம்மம்மா எங்கள் இதயங்களில் என்றும் வாழ்வார்.

பேரமக்கள்
***ஆதித்தனும் துளசியும்***
மெல்பேர்ன்.
அவுஸ்திரேலியா.
25.05.2020

## நினைவு நிலைத்திருக்கும்

அம்மம்மாவின் பிரிவு எம்மை வாட்டுகின்றது. அவர் அன்பான உபசரிப்பும் கனிவான வார்த்தைகளும் இன்றும் என் நினைவில் உள்ளன. சிறு வயதில் எனக்குக் கதை கேட்பதில் ஆர்வம் அதிகம். அம்மா எனக்குக் கதைகள் கூறுவார். அப்போது நான் “ஓம்” “ஓம்” என்று தலை அசைத்து அதைக் கேட்பேன் என்றும், யாரும் என்னை அழைத்தாலும் “ஓம்” என்றே மறுமொழி கூறுவேன் என்றும், இதை அவதானித்த அம்மம்மா “இவன் தெய்வக் குழந்தை “ஓம்” என்ற பிரணவ மந்திரத்தையே அடிக்கடி உச்சரிக்கின்றார்” என்று பாராட்டியதாக அம்மா கூறுவார். அவரைச் சென்று மீண்டும் பார்க்க வேண்டும், அன்பான வார்த்தைகளைக் கேட்க வேண்டும் என்று நினைத்திருந்தேன்.

ஒவ்வொருத்தர் உடலிலும் ஒரு மூலையில் உயிர் குடியிருக்கின்றது, ஆனால் அந்த உயிர் ஓரிடத்தில் நிலையாகத் தங்குவதில்லை. நிரந்தரமாகத் தங்க இடமில்லாத அகதி தான் உயிர். இதனையே வள்ளுவர்,

“புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு” - குறள்-340

என்று கூறுகின்றார், நிலையான இருப்பிடம் இல்லாத உயிரினால் எமது வாழ்வு நிலையில்லாமலே தள்ளாடுகின்றது. ஆனால் அந்த நிலையில்லாத வாழ்வுச் சக்கரத்துள் நாம் வாழப் பழகிக் கொள்கின்றோம்.

அம்மம்மாவை மீண்டும் சந்திப்பேன் என்ற எனது ஆசையும் அந்த நிலையாமைச் சக்கரத்துள் நசியுண்டு போனமை துர்ப்பாகியமே. என்றாலும் அவர் நினைவு என்றும் என்னுள் நிலையாக நிற்கும்.

அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

பேரன்
***க. செழியன்***
அவுஸ்திரேலியா.

28.05.2020

## Ammamma ...

Ammamma, although distance separated us
Your happiness was felt during every visit
Thank you for your encouragement and kindness

Ammamma, you loved music and art
Memories of drawing and colouring flowers
Symbols of love, gratitude, and joyfulness

Ammamma, your creativity will carry on
As we pass on the gift to our children
Thank you for inspiring us

Ammamma, you are now living peacefully
As you watch over your dearest family and friends
Praying for their health and happiness

Ammamma, you will be missed by all
Memories fade but will not be forgotten
Thank you for all your sacrifices

Grand Daughter
***Sangitha Skandakumaran***
London

## Appamma,

Thank you for the love and support you have given me throughout the years you were
with us. Your passion and love for your children and grandchildren will continue to be a
part of our lives. I hope you have found peace and are in a better place now.

Grandson
***Praveen Rajasegaran***
Canada

## Ammamma

I lived with My grandma for my entire childhood so it's safe to say she played a huge role in raising my brother and I. They say the gift of knowledge is the highest gift in the world. Ammamma taught me how to read and write in Thamil at my young age. Something that is so sacred and I know I wouldn't have learned it if it weren't for her. Ammamma also taught me the importance of faith. She had an unwavering faith in God. Among many other lessons, these are the two things I will carry with me for the rest of my life and hopefully pass on, and I am forever grateful for that. I know you will be watching over us, looking out for our well-being as you always did.

Grand Daughter
***Keerthana Kathirgamanathan***
Canada

## Ammama

One of the things I still cherish to this day are those times when you would draw a picture and I would try to copy it the best I could. You made me find a love for art and I couldn't thank you enough for that.

Although I still haven't learned how to read Thamil even after you tried for so long to teach me, you taught me much more about life than you probably even realized. Your ability to always carry a positive attitude and show love to those around you by blessing anyone who greets you are traits that I aspire to have.

You've made my childhood an unforgettable experience and I hope I've made an impact on your life just as much as you've made on mine.

Your Grandson
***Sayon Kathirgamanathan***
Canada

## அமரர் திருமதி இராசாம்பிகை இராசலிங்கம் நினைவாக

25 - 4 - 2020 அன்று எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி கனடா நாட்டில் மீளாத் துயில் கொண்ட எனது மாமியார் திருமதி இராசலிங்கம் இராசாம்பிகை நினைவாக அவரின் ஆரம்பகால வாழ்க்கை வரலாற்றை நினைவு கூர்வதில் மன ஆறுதல் பெறலாம்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

என்னும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் என்றோ ஒருநாள் இறப்பர். எனவே இவற்றை கருத்தில் கொண்டு மன ஆறுதலை பெறலாம்.

அன்னார் வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலயத்தின் நிர்வாகியாக செயற்பட்ட காலம் சென்றவர்களான வைத்தியநாதர் செல்லையா, பூரணம் தம்பதியினருக்கு மகளாக 22 -12-1929 ஆம் திகதி வந்துதித்தார். அன்னாருக்கு காலஞ்சென்றவர்களான சோமாஸ்கந்தன், பூம்பாவை, சிவசாமி என்பவர்கள் சகோதரர்களாகும். தனது ஆரம்பக்கல்வியை யாழ்/ சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், உயர்கல்வியை யாழ்/ வேலணை மத்திய கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் பெற்றிருந்தார். 1953 ஆம் ஆண்டளவில் எங்களுடன் வசித்து வந்ததால் நான் 1953ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைவதற்கு எனக்கு கல்வி புகட்டி உறுதுணையாக இருந்தார், பின்னர் 1957-ஆம் ஆண்டு பண்டாரவளையில் புனித மரியாள் ( St. Mary's) தமிழ் பாடசாலையில் ஆசிரிய நியமனம் பெற்று கடமையை ஏற்றுக்கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு மாணவர்கள் பாராட்டக் கூடிய வகையில் கல்வி புகட்டி வந்தார். ஆசிரியர் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டு 15 -3 - 1962 தொடக்கம் 1- 3 -

1964 வரை யாழ்/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு மீண்டும் அதே பாடசாலையில் 1 – 3 – 1964 தொடக்கம் 29 – 2 – 1968 வரை தனது சேவையை தொடந்தார் .பின்னர் இடமாற்றம் பெற்று 1 – 3 – 1968 தொடக்கம் 17 – 1 – 1969 வரை சிறு மலர் பாடசாலை ( Little Flower Convent ). அதனை தொடர்ந்து 18 – 1 – 1969 தொடக்கம் 14 – 6 – 1969 தொடக்கம் யாழ்/ புங்குடுதீவு கணேசா வித்தியாசாலையில் கடமையாற்றினார். அதனை தொடர்ந்து 15 – 6 – 1969 தொடக்கம் சேவையை தனது சொந்த ஊரான வேலணையில் யாழ்/ சைவப்பிரகாச வித்தியாசாலையில் கடமையை ஏற்று 15 – 6 –1989 வரை சேவையை திறம்பட ஆற்றி ஓய்வு பெற்றார்.

பண்டாரவளையில் சேவையாற்றி கொண்டிருக்கும் வேளையில் அங்கு கணக்காளராக கடமை புரிந்த வேலணை மேற்கை சேர்ந்த காலஞ்சென்ற சண்முகம் தெய்வானையின் புதல்வரான இராசலிங்கத்துடன் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார்.

திரு இராசலிங்கம் அவர்கள் தனது முதல் மனைவி காலம்சென்ற வைத்தியநாதர் சிவசம்புவின் மகள் இராசலட்சுமி நோயுற்று இயற்கை எய்தியதின் காரணமாக தனது உடன்பிறவா சகோதரியின் இடத்தை நிரப்பிக் கொண்டார். அன்னார் தன் வாழ்நாளில் தனது சகோதரி பெற்றெடுத்த இரு பிள்ளைகளான இராஜகோகிலம், இரஜாம்பிகை இருவரையும் கல்வியில் சிறப்புற மேம்படுத்தி மகிழ்வு கண்டார். அவர்களுள் இராஜகோகிலம் ஸ்கந்தகுமாரனை மணந்து அமெரிக்காவிலும், இரஜாம்பிகை கலாநிதி கமலநாதனை மணந்து அவுஸ்ரேலியாவிலும் வாழ்கின்றனர். தான் பெற்றெடுத்த பிள்ளைகளான மகன் இராஜசேகரன் பிரேமலதாவையும் , மகள் இரஞ்சிதலெட்சுமி, அமரரின் உடன்பிறவா சகோதரர் காலம்சென்ற பண்டிதர் சிவகடாட்சம்பிள்ளை அவர்களின் மகன் கதிர்காமநாதனை மணந்து கனடா நாட்டில் வாழ்கின்றனர். தனது பேரப்பிள்ளைகளின்

உயர்வு கண்டு கனடா நாட்டில் வாழ்ந்து வரும் வேளையில் இயற்கை எய்தினார். அன்னாரின் ஆன்மா வேலணை சிற்பனை முருகன் பாதாரவிந்தங்களில் சென்றடைய வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

மருகர்,
*பொன் . ஈசன்*
ஓய்வு நிலை உப அதிபர்
யாழ் /வேலணை மத்திய கல்லூரி

## நல்லாசிரியை அமரர் திருமதி இ . இராஜலிங்கம்

ஈழத்திருநாட்டில் அழகை மெருகூட்டும் வடபால் அமைந்த சப்த தீவுகளில் ஒன்றான சைவமும்,தமிழும் சிறப்புற்று விளங்கும் பசுந்தீவாம் வேலணையில் வடக்கே வயலும், வயல் சார்ந்த நிலப் பிரதேசமாக விளங்கும் பள்ளம்புலக் கிராமத்திற்கு அண்மையாக மக்களுக்கு அறிவையும், ஆன்மீகத்தையும் வழங்கும் நிலையங்கள் பாடசாலைகள், ஆலயங்கள் பலவற்றை உள்ளடக்கிய குறிப்பாக வேலணை மத்திய கல்லூரியும், அதன் விடுதிகளும் அமைந்த பிரதேசத்திற்கு அண்மையாக இருப்பிடத்தை கொண்ட திருமதி இராசாம்பிகை இராசலிங்கம் ஆசிரியை அவர்கள் நான் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் அதிபராக பொறுப்பேற்ற போதும் பின் மாற்றலாகி யாழ் வந்த போதும் அப்பாடசாலையிலேயே கற்பித்துக் கொண்டிருந்தார். இவர் இப்பாடசாலையில் ஏறத்தாழ இருபது வருடங்களாக சேவையாற்றி இங்கிருந்தே ஓய்வு பெற்றார் என்பது அறியக்கூடியதாக இருக்கின்றது.

எனது காலத்தில் இவர் தரம் 1, தரம் 2 வகுப்புகளில் தாமாகவே விரும்பி ஏற்று கல்வி கற்பித்து வந்தார். மேல் வகுப்புகளில் தேவைக்கேற்ப சமயம், சித்திரம், மனையியல் போன்ற பாடங்களையும் கற்பித்து வந்தார். மிகவும் அமைதியான சுபாவம் உடையவர். தேவையில்லாது எவருடனும் அதிகமாக பேசமாட்டார். மாணவர்களுடன் மிகவும் அன்பாகவும் அதேவேளை தேவையான இடத்தில் கண்டிப்பாகவும் செயலாற்றி வேலணை மாணவர்கள் மத்தியில் ஒரு சிறப்பான இடத்தை பலகாலம் தக்க வைத்துக் கொண்டிருந்த ஒரு சில ஆசிரியர்களில் இவரும் ஒருவர். எனது நிர்வாக கடமைகளிலும் எவ்வித சலிப்பும் இன்றி சந்தோசமாக ஒத்துழைப்பு வழங்கியதோடு நான் வேண்டும் எந்தப் பணியையும் திருப்தியாக ஆற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு பாடசாலைக்கு அண்மையிலேயே அவரின் வீடு அமைந்திருந்ததால் விடுமுறை நாட்களிலும்

பாடசாலைக்கு வந்து உதவுவதோடு மாணவரின் நலன் கருதி மேலதிக வகுப்புகளையும் நடாத்திய ஒரு சிறந்த ஆசிரியர் ஆவார்.

இவ்வாறு இவரது நல்ல சேவையினை உள்ளத்திருத்தி நாமும் அன்னாரை நினைவு கூர்வதோடு, அவரின் ஆத்மா சாந்தி அடையவும் உற்றார், உறவினர் அமைதி பெறவும் ஆடல்வல்லான் அம்பொற் கழலினை இறைஞ்சி ஏத்துவோமாக.


சைவப்புலவர்,

***மு. திருஞானசம்பந்தபிள்ளை,***

ஓய்வுநிலை அதிபர்

யாழ்/ வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை

## அமைதியின் உறைவிடம்

திரு இராசலிங்கம் அவர்களும் அவர் மனைவி இராசாம்பிகை அவர்களும் 1993 ஆம் ஆண்டு கனடா வந்தார்கள். அவர்களை நானும் எனது மனைவியும் போய் பார்த்து சுகம் விசாரித்துவிட்டு வந்தோம். அடிக்கடி. Tuxedo court இல்லத்துக்கு போய் சில மணி நேரம் அவர்களுடன் செலவழிப்போம். அவர்கள் மலைநாட்டில் தொடர்ந்து வாழ்ந்து வந்த படியால் அவர்களுக்கும் எங்களுக்கும் நெருங்கிய தொடர்பு கனடா வரும் வரை இருக்கவில்லை. அவர்கள் வருகையினால் எனது மனைவிக்கு ஒரு அன்பு மச்சாளும், எனக்கு ஒரு அன்பு அண்ணரும் கிடைத்தனர். பல மாதங்களாக முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வந்த இராசாம்பிகை அவர்கள் ஏப்ரல் 25 அன்று நம்மை விட்டு பிரிந்து விட்டார் என்ற துக்கமான செய்தியைக் கேட்டு ஆழ்ந்த துயரத்தில் மூழ்கினோம்.

அன்னார் சாத்வீக குணம் உடைய ஒருவர். எந்த கருமத்தையும் ஆழ்ந்து சிந்தித்து செய்பவர். கோபம் வந்தாலும் அதை வெளிப்படுத்தி பிறர் மனங்களை புண்படுத்த மாட்டார். வீண் கதைகள் பேசுவதிலோ, ஒருவர் கதையை வேறு ஒருவருக்கு சொல்வதிலோ நேரத்தை செலவிட மாட்டார். அன்னார் கருமமே கண்ணாக தனது குடும்பப் பொறுப்புகளை செய்த வண்ணமே வாழ்ந்து வந்த ஓர் கர்மயோகி. அன்னார் ஒரு பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியை. பாலர் பிரிவில் கல்வி கற்பிப்பதில் விஷேட சித்தி பெற்றவர். திறமையான ஆசிரியை என்ற நன்மதிப்பையும் பெற்றவர்.

அம்மையாரின் வாழ்க்கையில் ஒரு கட்டத்தில் முக்கியமான தீர்மானம் ஒன்று எடுக்கவேண்டிய சூழ்நிலை உருவானது. அது தனக்கான வாழ்க்கைத் துணைவரை தெரிவு செய்வது பற்றிய தீர்மானமாகும். பண்டாரவளையில் மக்களால் மிகவும் மதிக்கப்பட்ட, எஸ்டேட் முதலாளியின் நம்பிக்கைக்கு பாத்திரமான கண்ணியமான திரு. இராசலிங்கம் அவர்களின் பெயர் தான் அறிமுகப் படுத்தப்பட்டது. அவர் எஸ்டேட் காரியாலய பொறுப்பு

உத்தியோகத்தர் ஆக கடமையாற்றியவர். பெண்ணுக்கு படிப்பு, தொழில், அழகு யாவுமே பொருந்தியிருந்தது. வேறு யாராவது என்றால் உடனேயே இந்தப் பேச்சை தட்டிக்கழித்து இருப்பார்கள்.

ஆனால் அன்னாரோ சிந்தித்து பதில் சொல்வதாக கூறி சில நாட்களின் பின் சம்மதத்தை தெரிவித்தார். நடக்கவே முடியாதது நடந்தேறிவிட்டது. இதன் மர்மம் தான் என்ன?

தன்னை பண்டாரவளைக்கு வரவழைத்து அங்குள்ள தமிழ் பாடசாலை ஒன்றில் உத்தியோகம் பெற உதவியமைக்காகவும் உடன்பிறவா சகோதரியின் மறைவால் தவித்து நின்ற இரு பிள்ளைகளையும் தன் பிள்ளைகளாக கருதியமையாலும் திரு. இராசலிங்கம் அவர்களை திருமணம் செய்ய சம்மதித்தார். அவரது தியாக உணர்வும், பரோபகார சிந்தனையும் போற்றுதற்குரியது.

அதனால் போலும் அவர்களது பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் கனடா தேசத்தில் படித்து முன்னேறி வருகிறார்கள். “நூலைப் போல சேலை தாயைப் போல பிள்ளை” இந்தப் பழமொழி திரு.இராசலிங்கம் குடும்பத்திற்கு முற்றிலும் பொருந்தும். பிள்ளைகள் மட்டும் அல்ல பேரப்பிள்ளைகளும் கூட சாந்த மானவர்களாக காணப்படுகிறார்கள். ஒரு குடும்பத்தில் இருக்க வேண்டிய புரிந்துணர்வு, அன்பு, விட்டுக் கொடுக்கும் தன்மை ஆகிய பண்புகளை இவர்களில் காணலாம். அன்றைக்கு அன்னார் எடுத்த தீர்மானம், இன்றைக்கு ஒற்றுமையாகவும் பண்பாகவும் வளர்ந்து வரும் ஒரு குடும்பம் அமைவதற்கு ஏதுவாக இருந்திருக்கிறது. அன்னார் ஆத்மா சாந்தியடைய நான் மனதார பிரார்த்திக்கிறேன்.

***S. பரமானந்தம்***

ஓய்வு நிலை ஆசிரியர்

யாழ் இந்துக் கல்லூரி.

## இராசாம்பிகை - என் நினைவில்

வேலணைத் தீவின் நடுவணமர் வேலணைக் கிராமத்தில் வீற்றிருப்பவரே சிற்பனை முருகன். முருகன் கோயிலுக்கு அண்மையில் இராசாம்பிகை பிறந்து வளர்ந்தார்.

கற்பனை வயலுள் சொற்கதிர் சொரியக் கற்பகதருவை ஒத்திடு பனைகள்
நிற்பன நிற்கச் சிற்பரமே யங்குற்றது போல அற்புத வேலொன்றத்தின மணைய
நற்பெயர் பெற்ற வேலணை யாகிய நற்பதி யதுவும் நற்பலன் அடையச்
சிற்பனை முருகன் பொற்பதியாகச் சேர்ந்த தவன்தன் தாளிணை தஞ்சம்.

இத்தகைய நற்பதியாம் வேலணையில் சிற்பனை முருகன் கோயிலைக் கட்டிக் காத்த பெருமை இராசாம்பிகையின் தந்தையார் செல்லையா குடும்பம் மற்றும் தாயார் வழி ம. க குடும்பத்தினரையே சாரும். இராசாம்பிகை குடும்பத்தில் இனிமையான குரல் மற்றும் சங்கீதக்கலை என்பன இறையின் தனிக் கொடை. எனினும் இராசாம்பிகை தன்னை ஒரு தனித்தன்மையான ஆசிரியையாகத் தன் சொந்த முயற்சியால் ஆக்கிக் கொண்டார்.

இராசாம்பிகை என் நினைவில் சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவியாக நான் அங்கே படித்த காலத்தில் படித்தவர். நாங்கள் இருவரும் பாடசாலையிலிருந்து தென் திசையில் எங்களது வீடுகட்குப் போகும்போது வெகு தூரத்திற்கு ஒருரை ஒருவர் பார்த்துக் கொண்டே நடக்கலாம். இராசாம்பிகை வயல்களினூடாக வரம்புகளில் நடந்து போகின்ற காட்சி என்றும் என் மனதில் ஊன்றிப் பதிந்துள்ளது. இதனை நான் பலருக்கு எடுத்துச் சொன்னதுமுண்டு. அவரது நீண்ட கரும் பின்னல், நிமிர்ந்த நன்னடை, உயர்ந்த தோற்றம், அழகான நீண்ட பாவாடை சட்டை இவையெல்லாம் மறக்க முடியாதவை. இளமைக் காலத்திருந்தே இவரிடம் அமைதியான பண்பும் ஆதரவும் நிறைந்திருந்தது. சலசலப்போ, பொறுமையை இழக்கும் பான்மையையோ நான் இவரிடம் கண்டதில்லை. தானுண்டு தன் கடமை உண்டென வாழ்ந்த ஒரு பெண்மணி இவர்.

ஏறத்தாழ நாற்பது வருட இடைவெளிக்குப் பின் கனடாவில் 2002ம் ஆண்டில் நாம் சந்தித்தோம். மேற் கூறிய குணாதிசயங்கள் நிரம்பிய இராசாம்பிகையையே கனடாவிலும் கண்டேன். எப்பொழுதும் புன்னகை தவழும் முகம் அதற்கு ஒளியூட்ட மிகப் பெரியதோர் குங்குமப் பொட்டு இவையெல்லாம் இராசாம்பிகையின் தனி முத்திரைகள்.

இறுதியாக நான் அவவைக் கண்டது முதியோர் இல்லத்தில். தானாய் இயங்கும் தன்மை தடைப் பட்டதால் முதியோர் இல்லத்தில் இருக்க நேரிட்ட போதும் கூட தன் அன்பை வெளிப்படுத்திய வித த்தை என்னால் மறக்கவே முடியாது.

நான் யார் என்று கூறியதும், இது மலர் தானே என்று இறுகத் தழுவிக் கட்டிக் கொஞ்சி நீண்ட நேரம் என்னுடன் அளவளாவிய பின்பே நான் அவ்விடமிருந்து வெளியே வந்தேன். இவையெல்லாம் நீர் மேலெழுத்துக்கள். நினைவலைகள்.

நேற்றிருந்தார் இன்றில்லை என்னும் பெருமை உடைத்தான இவ்வுலகு எமக்கு என்றும் சொந்தமல்ல. அந்த வகையிலும், கொறோனா வைறஸ் எனப்படும் கிருமித் தாக்கம் மானிட இனத்தைஅழிக்குமோ என்ற பீதி பெருகி வரும் இவ் வேளையிலும் வாழ்க்கை நிலையற்றது என்ற கோட்பாடு எம்முள் ஊன்றிப் பதிகின்றது. எனவே பழுத்த பழமாக எம்மை விட்டுப் பிரிந்த இராசாம்பிகையின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

"குடம்பை தனித்தொழியப் புட் பறந்தற்றே
உடம்பொடுயிரிடை நட்பு".

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

*வராதா சண்முகநாதன்*
(வேலணை மலர்)
ஓய்வுநிலை ஆசிரியை

## ஆசிரியை இராசாம்பிகை

அழகன் முருகன் அவன் அருட்பார்வையிலே சீரும் சிறப்பும் பெற்று சிறப்புற வாழும் சிற்பனை மக்கள். வணிகமும், விவசாயமும் பெரும் தொழிலாகக் கொண்டு வாழும் மக்கள், இங்கேதான் ஒரு பாரம்பரிய கலைக் குடும்பத்தில் இராசாம்பிகை ஆசிரியை தோன்றினார். இளமையிலே கல்வியிலும், கலைகளிலும் ஆர்வமுள்ளவராக விளங்கினார். ஆசிரிய தொழிலை விரும்பி ஆசிரியக் கலாசாலைக்குச் சென்று பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறி எல்லோரும் மதிக்கத்தக்க நல்லாசிரியையாக சேவையாற்றினார்.

வாசிப்பு ஒருவனை முழு மனிதனாக்கும் என்ற ஆன்றோர் சொல்லுக்கேற்ப பத்து வயதிலேயே வாசிப்பு பழக்கத்தை ஆரம்பித்து இன்றும் 98 அகவை நிரம்பிய நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் பயணத்தை நடத்திக்கொண்டிருக்கும் இராசலிங்கம் ஐயா அவர்களை துணைவராக ஏற்று இந்த வாழ்வை இனிதே நடாத்தினர். இரு பிள்ளைகளையும் பெற்று அவர்களுடைய முன்னேற்றத்தையும் கண்டு மகிழ்ந்தார்.

வைத்தியசாலையில் அவர் இருந்தபோது பார்வையிடச் சென்றிருந்தேன். அங்கே நான் பார்த்த இரு நிகழ்ச்சிகள் மறக்கமுடியாதவை கணவரும் என்னோடு அவர் கால்மாட்டில் நின்று கொண்டிருந்தார். அவரை சைகை காட்டி தனது தலைப்பக்கமாக நிற்க வைத்தார் கணவனுக்கு கால் நீட்டி படுத்து இருப்பது நல்லது அல்ல என்பதற்காக இதைச் செய்தார் என்பதை பின்பே அறிந்தேன்.

இரண்டாவது இவருக்கு சாப்பிடுவது சற்று சிரமமாக இருப்பதால் சிறு அறுவை சிகிச்சை செய்து குழாய் மூலம் உணவு கொடுக்க வைத்தியர்கள் ஆலோசனை கூறிய போது மகள் இதை விரும்பாது தான் கூட நின்று திரவ உணவை கொடுப்பதாக ஏற்று

கதைத்து அறுவைச் சிகிச்சையை நிறுத்தியதால் அவர் நீண்டகாலம் வாழ வழிசெய்தார். இது போற்றுதற்குரியது.

இறுதி மரியாதை மனிதப் பண்பு மட்டுமல்ல சில மிருகங்களும் செய்கின்றன. கொடிய கொரோனா வைரஸ் அதை எம்மைச் செய்ய விடவில்லை, வருந்துகின்றோம். ஆன்மா சாந்தி பெற பிரார்த்திப்போமாக.

*ச. சிவலோகநாதன்*
ஒய்வுநிலை அதிபர்
யா / சுருவில் றோ. க . த. பாடசாலை

## சமய தமிழ் பற்றாளர்

அமரர் திருமதி இராசாம்பிகை இராசலிங்கம் வேலணை மேற்கை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட இவர் சிற்பனை முருகமூர்த்தி கோவில் அறங்காவலரான இவரின் தந்தையார் அமரர் செல்லையா அத்துடன் அமரரின் சகோதரர் குறித்த ஆலயத்தின் பரிபாலன சபை முன்னாள் தலைவர் அமரர் சோமாஸ்கந்தன் ஆகியோருடன் குறித்த ஆலயத்திற்கு பல தொண்டுகளை செய்துள்ளார். யா/ வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தனது ஓய்வு காலம் வரை பணியாற்றி குறித்த பாடசாலை வளர்ச்சிக்காகவும் அபிவிருத்திக்காகவும் அரும்பாடு பட்டவர்.

தனது இறுதிக் காலத்தை கனடாவில் சைவ, சமய நெறியில் நின்று இறைவன் திருவடி நிழலை நினைந்து அமைதியாக இயற்கை மரணம் எய்தினார். இவரின் மறைவினால் துயருற்றிருக்கும் இவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, இவரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல சிற்பனை முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி !

***திரு க. இளங்கோவன்***

தலைவர் – சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபை,

***திருமதி ச. இளங்கோவன்***

சட்டத்தரணி, ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி.

### அமரர் திருமதி இராசாம்பிகை இராசலிங்கம்
### ஓய்வு பெற்ற ஆசிரியர்

## மென்மையை கொண்டவள் - மேன்மைகள் பூண்டவள்

பெண் என்பவள் மக்களிடத்தில் அன்பும் கருணையும் இரக்கமும் கொண்டவர், சமூகத்தில் மக்களால் போற்றப்படுபவர் என்பதற்கு இணங்க தீவகத்தில் வளங்கள் பலவும் கொண்ட வேலணையில் வடக்கில் மத்திய கல்லூரிக்கு அண்மையில் பலராலும் மதிக்கப்பட்ட கணக்காளர் சண்முகம் இராசலிங்கம் அவர்களின் அன்பு மனைவி திருமதி இராசலிங்கம் தனது நற்பண்புகளால் அயலவர்களால் அன்பாக மதிக்கப்பட்டவர்..

திருமதி இராசாம்பிகை ரீச்சர் என அழைக்கப்பட்டவர் வீட்டிலும் பாடசாலையிலும் "ராசாத்தி" தான் பெயருக்கு ஏற்ப வீட்டில் தனது நான்கு பிள்ளைகளையும் சமூகத்தில் மக்களால் போற்றப்படும் அளவிற்கு உயர்நிலையில்– கல்வியிலும் பண்பாட்டிலும் மேம்படுத்தியு ள்ளார்.

அதாவது மூத்த மகள் இராஜகோகிலம் என்றவர் விஞ்ஞான பட்டதாரியாகவும் இரண்டாவது மகள் இராஜாம்பிகை பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகவும் மூன்றாவது மகன் இராஜசேகரன் என்பவர் பொறியியல் பட்டதாரியாகவும் நான்காவது மகள் ரஞ்சியை ஆங்கில ஆசிரியராகவும் மேம்படுத்தியுள்ளார். இவரது கணவர் திரு இராசலிங்கம் அவர்களும் அமைதி சாந்தம் பொறுப்புணர்வு அயராத உழைப்பு என்பவற்றால் குடும்பம் சிறப்படைய ஊன்று கோலாலானார்.

திருமதி இராசாம்பிகை ரீச்சர் எனது கல்லூரி ஆசிரியை தொழிலில் வன்மை மிக்கவர். ஆறாம் வகுப்பு மாணவர்களின் கல்வியில் சிறந்த பெறுபேறுகளை பெற வைத்தவர். இதற்கு மாணவர்களின் பெறுபேறுகள் சான்றாகும். நம் மாணவர்களை இன்முகத்துடன் நெறிப்படுத்தியதுடன் அவர்கள் தங்களின் உறவு என்று எண்ணி பழகுவதை நேரடியாக சகஆசிரியர் என்ற நிலையில் அவதானித்து உள்ளேன். அதாவது நல்ல வழிகளில்

வகுப்பறைகளை பேணுவதில் அவருக்கு அவரே நிகர். இடைநிலை மாணவர்கள் கவின்கலை பாடல்களில் ஒன்றான சித்திரம் கற்பித்தலிலும் மாணவர்கள் G.C.E O/L பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற வைத்தவர் என்பதில் எதிர்மறைக் கருத்து கிடையாது. அத்துடன் சகஆசிரியர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ரீச்சரின் சிறந்த பண்பு, அர்ப்பணிப்பு கடமை உணர்வு என்பவற்றால் ஆண்டவன் அகமகிழ்ந்து பிள்ளைகள் நால்வருக்கும் சிறந்த மணவாழ்க்கை அளித்துள்ளார். பாடசாலைக் காலங்களில் எவருடனும் தேவையற்று பேசமாட்டர் அதிர்ந்து பேச மாட்டார், புல்லும் சிலம்பா நிமிர்ந்த நடை பாடசாலைக்கு வரும் போது முன்னால் மகனும், சாறியை பிடித்தபடி கடைசி மகளும், ஒரு கையில் கற்பித்தல் துணைச் சாதனம் மறுகையில் ஒரு குடையும் பிடித்தபடி எதுவித ஆடம்பரமும் இல்லாமல் பாடசாலைக்கு வருவதே ஒரு சிறப்பம்சமாகும். இல்லறமும் ஆசிரியர் தொழிலும் இனிமையாக சென்றது.பூரண வாழ்க்கை ஆனால் நாட்டின் ஏற்பட்ட இடப்பெயர்வு அவரை நாடு விட்டு நாடு செல்ல வைத்தது.

தனது குடும்பப் பொறுப்புகளையும் தொழில் கடமையையும் பூரணப்படுத்தி திருப்தி அடைந்த நிலையில் இறைவனடி தேடி சேர்ந்து விட்டார். கவலைகள் பிள்ளைகளுக்கும் கணவருக்கும் சேர்ந்தவர்களுக்கும் உடன்பிறந்தோர்கட்கும் இருக்கும். உற்றவர்கள் தேம்பி அழ பிரிவு யாரை விட்டது? துயராறித்தான் ஆகவேண்டும். அன்னாரது பிரிவால் துயருறும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா ஆண்டவன் அடியில் அமைதி பெற இறைவனை பிராத்திக்கின்றேன். "வாழ்க்கை தெரியாத போது தொடங்குகிறது அது புரிகின்ற போது முடிகிறது."

***திரு சுப்பிரமணியம் கனகநாயகம்***
இலங்கை கல்வி நிர்வாக சேவை S.L.E.A.S
இளைப்பாறிய விரிவுரையாளர்
பலாலி ஆசிரியர் கலாசாலை.

## அன்பென்னும் ஆயுதத்தால் அகரம் புகட்டிய ஆசிரியர் நமக்கு

சைவத்துடன் நல்லொழுக்கத்தையும், நிகரில்லா கல்வியையும் ஊட்டிய சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு மேலும் பிரகாசிக்க செய்த ஆசிரிய பெருந்தகை அமரர் இராசாம்பிகை ஆசான்.

கோபங்கொள்ளாமல்கற்று கொடுப்பது இயற்கை கொடுத்த கொடை ஆசானுக்கு. ஆயிரம்ஆயிரம் மாணவர்க்கு நல்லத்திவாரம் இட்ட ஆசிரியபெருந்தகை. அந்த வரம் எங்கள் ஐவருக்கும் கிடைத்ததோடு எங்கள் அண்ணாவுக்கு மாமி உறவானது மேலும் பெருமை தந்தது. தன் போல் மகள் இருக்க வேணுமென்ற நினைவால் தன் குடும்ப பெயர் சார்ந்த இரஞ்சிதலெட்சுமி என்னும் பெயரிட்டு அழகு பார்த்த தெய்வதாய், தாயிடம்கற்றது ஆயிரம் கோடி.அதில் மிகவும் வலிமையானது பொறுமை என்னும் நற்குணம்.நுண்ணறிவு அதிகம் கொண்ட, பெயரில் மட்டு மல்லாமல், குணத்திலும் பெருமை கொண்ட திரு ராஜலிங்கம் ஐயாவை கணவராக பெற்ற செல்வ சீமாட்டி! அவர்களின் மருகரான எங்கள் அண்ணாவில் மகன் போல பாசம் கொண்டவர்கள். சிற்பனைமுருகன் கோவில் ஸ்தாபகர் வழித்தோன்றல் ஆசிரிய தாயின் பொற்பாதங்களை நினைத்து பிரார்த்திக்கிறோம்.

அவர்தம் ஆத்மா சாந்தியடைய சிற்பனை முருகனை பிரார்த்திக்கின்றோம்.

*திருமதி யோகபதி தியாகராஜாவும்,*
மக்களும் , மருமக்களும்.

# கண்ணீர்அஞ்சலி

பிறப்பு
22
.
12
.
1929



இறப்பு
25
.
04
.
2020

## அமரர் திருமதி. இராசலிங்கம் இராசாம்பிகை

(யாழ் வேலணை சைவபிரகாச வித்தியாலயம் ஓய்வுபெற்ற ஆசிரியை)

அன்பும் அமைதியும்
தன்னகத்தே கொண்ட
நல்லசான்
ஆத்திரம் என்பது
இல்லா தொரு நல்ல குரு
எப்போதும் புன்னகை
நிறைந்த அன்னை
ஏங்க வைத்துவிட்டு - இறைவா
உன்னடி வந்து விட்டார்
ஊரை காக்கும் தெய்வமே
ஓய்வு கொடு உன் நிழலில்
ஓய்வின்றி உழைத்த
எங்கள் ஆசானுக்கே
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

எங்கள் ஆசானின் ஆத்மசாந்திக்காக
ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

யாழ் வேலணை சைவபிரகாச வித்தியாலயம்
பழைய மாணவர்கள்

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் திருமதி. இராசலிங்கம் இராசாம்பிகை

(யாழ் வேலணை சைவப்பிரகாச வித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியை)

இறந்தும் இறவாத இராசாம்பிகை அம்மா
அன்னார் சிவபதம் அடைந்த செய்திகேட்டு
மிகவும் துயரடைந்தோம்
மீளாத்துயில் கொண்டு உறவுகளை
ஆறாத்துயரில் ஆள்த்திச்சென்றீரோ
மறைந்தும் எல்லோர் மனங்களிலும்
மறையாத அன்னாருக்கு
கலையாத நினைவுகளுடன் உதிரும்
கண்ணீர் பூக்களை அர்ச்சித்து
அன்னார் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கிறோம்
அவர் பிரிவால் துயருறும் அனைத்து
உறவுகளுக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கல்கள்
தற்போதைய சூழ்நிலையால் அன்னாரின்
இறுதிச்சடங்கில் கலந்து கொள்ளமுடியாது
வருந்துகிறோம்
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

- Best Friends Group (Canada)

# கண்ணீர் அஞ்சலிகள்

## இராசாம்பிகை எனும் அன்னை

வேலணை மண்ணின் மாணிக்கம். எல்லோரும் பாராட்டும் ஆசிரியத்தொழில் கண்டு இனிதே பாராம்பிகை அருளால் பிள்ளைகள் நால்வர் கண்டு தேராம்மிகையீசன் அருளால் பிள்ளைகள் தாமும் பேராய் வாழ்ந்திட்டார் எனது முன்வீடுதனிலே. காலத்தின் கட்டாயம் ஞாலத்தில் புலம் பெயர்ந்து மக்கள் அழைப்பால் கோலத்தில் கோபமுறா கணவருடன் வந்திட்டார் கனடா நாடுதனிற்கே. மக்களுடன் பேரருமாய் மருமக்களுடன் பெருமிதமாய் உயிர் கணவருடன் உத்தமமாய் நோய் நொடியின்றி வயிரவர் துணையுடனே வாழ்ந்து வந்தார் பெருமையுடனே. காலம் கடந்தது யார் கண்பட்டதோ எம்மண்ணின் மாவரசி நோயுற்றார் சோர்வுற்றார் பாயுற்றார் அடைந்தாரே நடை தளர்ந்தாரே மக்கள் மனம் கலங்கலானாரே. ஆசிரிய அன்னை கூறாமல் மக்களும் மருமக்களும் கணவருடன் பேரரும் உறவும் மண்ணின் மக்களும் எதிர் பாராமல் பரமனடி சேர்ந்தது தகுமோ இது நியாயமோ எம் பராபரமே. பேராய் வாழ்ந்த அன்னை மக்களுடன் பேரர்க்கு பெருமை சேர்த்த நம் அயல் வாழ்ந்த அருமை ஆசிரிய அன்னை கூறாமல் குமரன் அவன் தந்தை நீலகண்டன் நிழலடைந்தாள் என்செய்வோம். கூறாமல் உன் இறுதிக்கடன் செய்து உனை வழியனுப்ப நீயும் தேராமல் வழிகொடுப்பாயோ என்றேங்கி நிற்கின்றார் அங்கே தேரேறிச்செல்கின்றாய் மாதாவே மரணம் எல்லோர்க்கும் வரும் என்று கூறாமல் கூறி நேராய் பரமனடி சேர்ந்தாயோ வாழ்க வாழ்க இறையடியில் அமைதி காண்பாயே ஒம் சாந்தி சாந்தி என வேண்டிடுவோம் தாயே. எதிர்பாராமல் எமக்கும் ஒருநாள் இவ்வழியே என்று விதியிதுவே என்றுறைவோம் வாழிய உன் புகழே.

*திரு பாலா*

முன்னாள் ஆசிரியர். வேலணை, பிரித்தானியா

## ஆசிரிய அன்னைக்கு தலை தாழ்த்தி ஓர் அஞ்சலி!

எட்டி அடியெடுத்து எழுந்து நின்ற வேளையிலே
ஏணிப்படியாய் ஏற்றிவைத்த தாயே!
அகரம் போதித்தாய் ! அன்பைப் போதித்தாய்!
எண்ணும் எழுத்தும் கண்ணெனப் போதித்தாய்!
சைவப்பிரகாசம் தந்த பிரகாசம் அம்மா!
கைபிடித்து எம்மைக் கரையேற்றினாய் அம்மா!
என் ஆரம்பக் கல்வியின் அத்திவாரம் நீ!
என் அறிவுக்கண் திறக்க வளர்த்தாய் ஆவல் தீ!
தாலாட்டும் அன்னைக்கு தாயே நீ நண்பி!
பாராட்டி நம்மைப் பண்படுத்திய சீமாட்டி!
சீராட்டி வளர்த்தாய்! சிறகுகளும் தான் கொடுத்தாய்!
தேரோட்டி போலிருந்து தேறவைத்தாய் கல்வியிலே!
போய்வா அம்மா! பூவலகப் போராட்டம் முடிந்ததென்று!
தாயாய் உன்பணிகள் சிறக்க வைத்த நிறைவோடு!
நேயத்தே நின்ற நிமலன் அவன் அடி சேர்ந்து
தூயபணி ஆற்றிடுவாய்! தொடர்வோம் உன் கல்விவழி!

உங்கள் மாணவி *நித்யலெட்சுமி*
அவுஸ்திரேலியா

## என்னால் முடிந்த சில வரிகள்

அகரம் அறிவித்த ஆத்மார்த்த குருவே
ஆரம்ப கற்றலின் அதி நுட்ப திருவே
இறுதியிலே கலந்து கொள்ள இயலாது போனதுவே
உறுதியா சொல்லுகிறேன்.... உயரும் உங்கள் புகழ்

நன்றி

உங்கள் மாணவன் *சிறீகண்ணன்*

## றஞ்சி உங்கள் அம்மாவின் இறுதி யாத்திரையில் என்னுடைய சில வரிகள்.

உங்கள் அம்மா
நல்லதோர் அன்னையாய் உங்களுக்கும்
அன்பான ஆசிரிய தாயாய் அநேகருக்கும்
இவ்வுலகில் தன் பணியை சிறப்பாக ஆற்றி
எல்லோர் மனதிலும் நீக்கமற நிறைந்து விட்டார்.
ஒரு பெண்ணின் சகல வாழ்க்கைப் பரிமாணங்களையும்
நிறைவாய்ப்பெற்று மகிழ்வாய் வாழ்ந்து
இறைவனில் இணைந்து விட்டார்.
உங்கள் சகோதரிகளின் பாசத்தை பற்றி நமது பள்ளிக்காலத்தில் நீங்கள் பேசியவைதான்
இப்போது உங்கள் அம்மாவை உங்கள் குடும்பத்தினரின் அன்பை பண்பை எனக்கு உணர்த்துகிறது.
சீரிய சிறப்பான இப் பெண்மணியை நான் வணங்கி
அவரின் இறுதிப்பயணத்திற்கு என் இதய அஞ்சலியை செலுத்துகிறேன்.

இறைவன் அவருக்கு சாந்தியை அளிப்பார்.

அவரின் பிரிவால் துயருறும் உங்களுக்கும் மன ஆறுதலைத் தருவார்.

"கலங்காதே நான் என்றும் உன்னோடு "

இது இறைவார்த்தை.

ரஞ்சியின் 6 "C" நண்பர்கள் சார்பில்
அனிற்றா

## ஆசிரியைக்கு எனது கண்ணீர்அஞ்சலி

ஆண்டு இரண்டில் அறியாப்பருவமதில்
கற்பித்த ஆசிரியப்பெருந்தகையே!!!

நித்தம் எம்மனதில் வந்து செல்லும்
புன்னகை ஆசானே!!!
வயோதிபம் தமை அணைத்திட்ட போதும்
கண்டவுடன் தன் மாணவி என
ஆசையுடன் கட்டியணைக்கும் தாயே!!!

உறவாகினேன் உங்கள் மகளுடன்
திருமணபந்தத்தால்
நெருங்கினோம் எல்லோரும் ஒர் குடும்பமாக!!!

உங்கள் உயிர்  தன் மடியில் போகவேண்டும் என ஆசைப்பட்ட
மகளின் வேதனைதனை கண்டு
ஆற்றமுடியாது தள்ளி நிற்கிறோம்!!!

காலத்தின் கொடுமையினால்
இறுதியாக முகம் காண
முடியாமல்
கண்ணீருடன் விடையளிக்கின்றோம்!!!

மாணவி
***திலோஜினி மோகனதாஸ்***
கனடா

## மஹாளயபட்ச புண்ய காலம்

புண்ணியம் நிறைந்த புரட்டாசி மாதத்தில், பௌர்ணமியை அடுத்த தேய்பிறை நாட்கள் முழுவதுமே மிகப் பெரிய ஆற்றல் நிறைந்தவை. இவற்றை மஹாளயபட்ச புண்ய காலம் என்பார்கள். சூரியன் கன்யா ராசியில் சஞ்சரிக்கும் புண்ணியமிகு புரட்டாசி மாதத்தில் கிருஷ்ணபட்சப் பிரதமை முதல் அமாவாசை வரை உள்ள காலத்துக்கு பித்ரு பட்சம், மஹாளயம் என்று பெயர். தந்தை, தாத்தா, கொள்ளுத் தாத்தா, தாயார், பாட்டி, கொள்ளுப் பாட்டி, தாய், தாய்வழித் தாத்தா, பாட்டி என மூன்று தலைமுறையினர், நம் ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள், பங்காளிகள் மற்றும் அனைவருக்குமாக இந்தக் காலங்களில் தர்ப்பணம் செய்யலாம்.

ஆத்மாவை “புத்ர நாம ஆஸீத்” என்கிறது வேதம். இந்த வாக்கியம், நமக்கும் நம் முன்னோர்களுக்குமான தொடர்பைத் தெளிவுற விளக்குகிறது. நம் முன்னோர்கள் இந்த உலகை விட்டுச் சென்றாலும், அடுத்து வேறு பிறவி எடுத்தாலும், நம்மிலும் நம் சந்ததியிலும் அவர்களின் தொடர்பு இருப்பதால் நம் முன்னோர்களுக்கான நன்றியை, மரியாதையை, வணக்கத்தை, கடமையை சிராத்தம், தர்ப்பணம் முதலான சடங்காகச் செய்கிறோம். அப்போது, பித்ருக்களின் பசிக்கும் தாகத்துக்குமாக எள்ளும் தண்ணீரும் அர்ப்பணிக்கிறோம்.

நம் தாய் தந்தை மற்றும் அவர்களின் முன்னோர்கள் இந்த உலகை விட்டுச் சென்ற பிறகு, பித்ருக்கள் எனப் போற்றப் படுகிறார்கள். நாம் வாழ்வது பூலோகத்தில் அவர்கள் வாழ்வது பித்ருலோகத்தில்! ஒவ்வொரு மாதமும் அமாவாசை முதலான முக்கியமான நாட்களில் அவரவரின் வீடுகளுக்குப் பித்ருக்கள் வந்து, வாசற்படிக்கு முன் நின்று, தங்களின் சந்ததியினர் அளிக்கும் உபசாரங்களை ஏற்று, ஆசீர்வதித்துச் செல்கிறார்கள் என்றும், ஒருவேளை சிறப்பாகத் தர்ப்பணம் செய்யாமல் விட்டு, அதனால் அவர்கள் மனவருத்தம் அடைந்தால், அது சாபமாக மாறி நம்மைப் பாதிப்பதாகவும் சாஸ்திரங்கள் எடுத்துரைக்கின்றன. என்றபடி,

நம்மால் இயன்ற அளவு சிறந்த முறையில் சிரத்தையோடு முன்னோர்களை வழிபட்டால், தீர்க்க ஆயுள், நல்ல குழந்தைகள், புகழ், சொர்க்கம், ஆரோக்கியம், பலம், செல்வம், இன்பம், தானியங்கள் போன்ற அனைத்தும் நமக்குக் கிடைக்கும் என்பது நம் முன்னோர்கள் கண்ட உண்மை அப்படிச் செய்யும்போது, நமக்கும் நம் சந்ததிக்குமான நன்மைகள் அனைத்தும் கிடைக்கும் என்பது உறுதி!

இந்த வருடம் (2020) மஹாளயபட்ச காலம் பூரணை விரதத்திற்கு அடுத்த நாள் செப்டெம்பர் இரண்டம் திகதி (செப்ரெம்பர் 2, 2020) புதன் கிழமை ஆரம்பமாகி செப்ரெம்பர் பதினாறாம் திகதி (செப்ரெம்பர் 16, 2020) புதன் கிழமை அமாவாசை அன்று நிறைவு பெறுகின்றது. இந்த பதினைந்து நாட்களில் ஒருநாளாவது ஆலயங்களிலோ, உங்கள் வீடுகளிலோ அந்தண சிவாச் சாரியார்கள் மூலம் எம் முன்னோர்களுக்காக தர்ப்பணம் செய்வது சாலச்சிறந்தது. இவ்வாறாக ஒவ்வொரு வருடமும் கடமை செய்து வந்தால் எம் சந்ததி சிறக்கும்.

எங்கள் அன்புக்குரிய சம்பந்தி அமரர் மதிப்புக்குரிய இராசாம்பிகை ஆசிரியை மஹாளபட்ச காலத்தில் பூலோகத்தாரால் பூசிக்கப் படக்கூடியவராக உயந்த நிலையில் வைக்கப்படுகின்றார். எங்கள் குடும்பத்தலைவர், அன்னாருடன் ஒன்றாக சைவப்பிரகாசத்தில் கற்பித்த கால நினைவுகளை மீடக்கின்றோம். காலச் சூழ்நிலைகள் புலப்பெயர்வால் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்தாலும் மனதால் ஒன்றாகவே வாழ்ந்தோம். கிட்டிய உறவினர் சம்பந்தியாக கிடைக்கப்பெற்று மகிழ்ந்தோம். உங்கள் ஆன்மா எம் குலதெய்வமான பெரியபுலத்தான் பாதம் சென்று அருள் புரிய வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!

உங்கள் சம்பந்தி,

***திருமதி திலகவதி சிவகடாட்ச்சம்பிள்ளையும்,***

குடும்பத்தாரும்.

## நிலையாமை

குறள் 331.

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

That ignorance which considers those things (including body & mind) to be stable which are not so, is dishonorable to the wise.

குறள் 332.

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

The acquisition of wealth is like gathering together of an assembly for a theatre; its expenditure is like that breaking of that assembly

குறள் 333.

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

Wealth is perishable; let those who obtain it immediately practice those virtues which are imperishable.

குறள் 334.

நாளென ஒன்றுபோற் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்.

Time, which shows itself to the ignorant as if it were something real is in the estimation of the wise only a saw which cuts down life.

குறள் 335.

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

Let virtues deeds be done quickly, before death come making the tongue silent.

குறள் 336.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

This world possesses the greatness that one who yesterday was is not today.

குறள் 337.

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

Innumerable are the thoughts which occupy the mind of the unwise who know not that they shall live another moment.

குறள் 338.

குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு.

The love of the soul to the body is like the love of a bird to its egg which it flies away from and leaves an empty nest.

குறள் 339.

உறங்கு வதுபோலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

Death is like deep sleep; birth is like awaking from it.

குறள் 340.

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு.

It seems as if the soul which takes a temporary shelter in a body, had not attained a home.

## Power of Ragas

Every Raga is a medicine, Every Raga is a Mantra, Every Raga has healing powers. Some of the Ragas have the ability to cure our health problems. When we sing bhajans in these Ragas, it cures a lot of our mental worries and health problems.

**1. Ananda Bhairavi** - Suppresses stomach pain . Reduces kidney type problems. Controls blood pressure.

**2. Bhairavi** - Reduces anxiety, pressures, skin disease, allergies.

**3. Raga Darbari (Darbari Kanada)** – is considered very effective in easing tension. It is a late night raga composed by Tansen for Akbar to relieve his tension after hectic schedule of the daily court life.

**4. Desh** - The suppression of the senses releases a negative force. The process of sublimation needs a spiritual path. Rag Desh can provide that. Its energy gives the listener serenity, peace, inner joy, right valor, universal love and patriotism.

**5. Ganamurte** - Helpful in diabetes.

**6. Hemavati** - Good for joint and back pain.

**7. Hindolam** - Improves digestive power. Cures stomach related problems.

**8. Kalyani** - Gives energy and removes tension and acts as general tonic. Dispels the darkness of fear; Gives motherly comfort and increases confidence

**9. Kapi** - Sick patients get over their depression, anxiety. Reduces absent mindedness.

**10. Karaharapriya** - Curative for heart disease and nervous irritability, neurosis, worry and distress.

**11. Kedaram** - Gives energy and removes tension.

**12. Kokilam** - Helps to prevent stone formation, burning sensations, sleeplessness and anxiety.

**13. Madhuvarshini** - Good for nerves. Cures diseases like slight headache, sleeplessness and sinus problems.

**14. Madhyamavati** - Clears paralysis, giddiness, pain in legs/hands, etc. and nervous Complaints.

**15. Maya Malava Gowla** -. This raga has the power to neutralize toxins in the body. Practicing it in the early hours of the morning, in the midst of nature will enhance the strength of the vocal chords.

**16. Neelambari** - To get rid of insomnia & to get good sleep and mental peace.

**17. Ranjani** - Cures kidney disease.

**18. Rohini** - Cures back pain, joint pain etc.

**19. Sama** - Makes mind sober, tranquil, induces good sleep. Good for world peace.

**20. Sivaranjani** - Powerful raga for meditation; bestows benevolence of God. Removes sadness

**21. Sandhya Kalyani** - Cures ear, nose and eye diseases. Relieves chronic clods. Gives good sleep and freshness.

**22. Shankarabharanam** - The power of this raga is incredible. It cures mental

**23. Shanmugapriya** - Sharpens the intellect of the singer as well as the listener. Instills courage in one's mind and replenishes the energy in the body.

**24. Suddha dhanyasi** - Remover of sorrows. Gives a happy feeling. Tonic for nerves. Cures rhinitis and migraine.

**25. Suruti** - Mitigates stomach burn, insomnia, fear, disgust.

**26. Todi** – gives tremendous relief to patients with high blood pressure.

**27. Vakulabharanam** - Alleviates asthma, bronchitis, heart disease, depression, skin disease and skin.

**28. Varali** - is good for heart, skin ailments and gastric problems. 29. Vasanta / Vasanti - Controls high and low blood pressure, cures heart as well as nervous diseases. Can clear the fog of confusion when a series of medical tests has to be analysed. It heals nervous breakdowns.

**30. Vasantha** - Cures paralysis

## அத்தனையும் படிக்க ஒரு பிறவி போதாது
## ஆனாலும் தெரிந்து கொள்வோம்
## எம் பொக்கிஷங்கள் எவை என்று ...

நமது தமிழிலே உருவான இலக்கிய மற்றும் இலக்கண நூல்களின் மூலமாகத்தான் நமது பண்டைய கால பண்பாட்டினையும் வரலாற்றினையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. எண்ணற்ற நூல்கள் காலச் சக்கரத்தில் சிக்கி அழித்து விட்ட போதிலும் சில நூல்கள தற்போது நமக்கு முழுமையாகவோ அல்லது சிதைந்தோ கிடைத்திருக்கின்றன. நமது தமிழ் கலாச்சாரத்தின் பொக்கிஷமான இவைகளே நம் தமிழினத்தின் முதுகெலும்பு.

## சைவ இலக்கியங்கள் (Shaiva Literatures)

### தோத்திர நூல்கள்

**பன்னிரு திருமுறைகள்**

இப் பாடல்களை எல்லாம் இராசராசனின் வேண்டுகோளுக்கிணங்க நம்பியாண்டார் நம்பி என்ற சைவப் பெரியார் பதினொரு திரு முறைகளாக வெளியிட்டார். பின்னர் சேக்கிழாரின் பெரியபுரா ணமும் சேர்ந்து பன்னிரு திருமுறைகள் என வழங்கப்படுகின்றது.

**சைவ சமய சாத்திர நூல்கள் : பதினான்கு**

சைவ சமயம் பற்றிய எண்ணங்களைத் தத்துவ நோக்கில் ஆழ்ந்து பார்த்தவை சைவ சாத்திர நூல்கள் எனப்பட்டன

திருவுந்தியார் (Thiruvunthiyar)
திருக்களிற்றுப்பாடியார் (Thirukalitruppadiyar)
சிவஞான போதம் (Sivagnana Potham)
சிவஞான சித்தியார் (Sivagnana Siddiyar)
இருபா இருபது (Irupa Irupathu)

உண்மை விளக்கம் (Unmai Vilakkam)
சிவப்பிரகாசம் (Sivappirakasam)
உண்மைநெறி விளக்கம் (Unmainerivilakkam)
திருவருட்பயன் (Thiruvarutpayan)
வினா வெண்பா (Vina Venba)
போற்றிப் பஃறொடை (Porrippaqrotai)
கொடிக்கவி (Kodikavi)
நெஞ்சு விடு தூது (Nenju Vidu Thoothu)
சங்கற்ப நிராகரணம் (Sangkarpa Nirakaranam)

**தல புராணங்கள் 200**

இத்தகையவை தமிழ் மொழியில் 200 இற்கும் அதிகமாகக் காணப்படுகின்றன.

## சங்க இலக்கியங்கள் (Sangam Literatures)

தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொடர்ச்சி கொண்ட உலகின் சிறந்த இலக்கியங்களில் ஒன்று. இவற்றில் சங்க இலக்கியங்கள் எனப்படுவது தமிழில் கிறிஸ்துக்கு முற்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட தொன்மையான இலக்கியங்கள் ஆகும். இச் சங்க இலக்கியங்கள் 473 புலவர்களால் எழுதப்பட்ட 2381 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்புலவர்களுள் பல தரப்பட்ட தொழில் நிலையுள்ளோரும் பெண்களும், நாடாளும் மன்னரும் உண்டு. சங்க இலக்கியங்கள் அக்காலகட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் தினசரி வாழ்க்கை நிலைமைகளைப் படம்பிடித்துக் காட்டுவதாய் உள்ளன. பண்டைத்தமிழரது காதல், போர், வீரம், ஆட்சியமைப்பு, வணிகம் போன்ற நடப்புகளைச் சங்க இலக்கியப்பாடல்கள் அறியத்தருகின்றன.

19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களான சி. வை. தாமோதரம்பிள்ளை, தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாத அய்யர் ஆகியோரது முயற்சியினால் சங்க இலக்கியங்கள் அச்சுருப்

பெற்றன. சங்க இலக்கியங்களை எட்டுத்தொகை நூல்கள், பத்துப்பாட்டு நூல்கள்,பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனப் பெரும்பிரிவுகளாகத் தொகுத்தடக்கப்பட்டுள்ளன

**எட்டுத்தொகை**

1.நற்றிணை (Narrinai)
2.குறுந்தொகை (Kurunthokai)
3.ஐங்குறுநூறு (Ainkurunooru)
4.கலித்தொகை (Kalithokai)
5.அகநானூறு (Agananooru)
6.பதிற்றுப்பத்து (Pathirruppattu)
7.புறநானூறு (Purananooru)
8பரிபாடல் (Paripadal)

**பத்துப் பாட்டு**

திருமுருகாற்றுப்படை (Thirumurugatrupadai)
பொருநராற்றுப்படை (Porunaratrupadai)
சிறுபாணாற்றுப்படை (Sirupanatrupadai)
பொரும்பாணாற்றுப்படை (Perumpanatrupadai)
மலைபடுகடாம் (Malaipadukadam)
மதுரைக்காஞ்சி (Maduraikanchi)
குறிஞ்சிப்பாட்டு (Kurinjipattu)
பட்டினப்பாலை (Pattinapalai)
முல்லைப்பாட்டு (Mullaipattu)
நெடுநல்வாடை (Nedunalvaadai)

**பதினெண் கீழ்கணக்கு பதினெட்டு**

1.நாலடியார் (Naaladiyar)
2.நான்மணிக்கடிகை (Naanmanikadikai)
3.இனியவை நாற்பது (Iiniyavainarpadhu)

4.இன்னா நாற்பது (Innanarpadhu)
5.திரிகடுகம் (Thirikadugam)
6.ஆச்சாரக் கோவை (Acharakovai)
7.சிறுபஞ்சமூலம் (Sirupanchamoolam)
8.முதுமொழிக்காஞ்சி (Mudhumozhikanchi)
9.பழமொழி நானூறு (Pazhamozhinaanooru)
10.ஏலாதி (Elathi)
11.திருக்குறள் (Thirukural)
12.கார் நாற்பது (Kaarnarpadhu)
13.ஐந்திணை ஐம்பது (Iiynthinaiiympadhu)
14.திணைமொழி ஐம்பது (Thinaimozhiiympadhu)
15.ஐந்திணை எழுபது (Iynthinaiezhupadhu)
16.திணைமாலை நூற்றைம்பது
(Thinaimaalainootruiympadhu)
17.கைந்நிலை (Kainilai)
18..களவழி நாற்பது (Kalavazhinarpadhu)

மேலும் இன்னிலை (Innilai) என்ற நூல் கூட இப்பிரிவினைச் சார்ந்ததாக சிலர் கருதுகின்றனர்.

## காப்பிய இலக்கியங்கள் (Epic Literatures)

### ஐம்பெருங் காப்பியங்கள்

பழந்தமிழ் இலக்கியங்களின் தொகுப்பில் காப்பியங்கள் என்கிற முக்கியப் பிரிவு உண்டு. அறம், பொருள், இன்பம் , வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருள்கள் அடங்கியவை ‘காப்பியம்’ எனப்பட்டன.

1.சிலப்பதிகாரம் (Silappadhikaram)
2.மணிமேகலை (Manimekalai)
3.சீவக சிந்தாமணி (Seevaga Chintamani)

4.வளையாபதி (Valaiyapathi)

5.குண்டலகேசி (Kundalakesi)

**ஐஞ்சிறு காப்பியங்கள்**

அறம், பொருள், இன்பம் , வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருள்கள் அடங்கியவை ‘காப்பியம்’ எனப்பட்டன. இந்த விதிமுறைகளில் ஒன்றோ பலவோ குறைந்து காணப்படும் கா

1. உதயண குமார காவியம் (Uthayana Kumara Kaaviyam)

2.நாக குமார காவியம் (Naga Kumara Kaaviyam)

3.யசோதர காவியம் (Yasodara Kaaviyam)

4.சூளாமணி (Choolaamani)

5.நீலகேசி (Neelakesi).

## வைணவ இலக்கியங்கள்
## (Vaishnava Literature)

**நாலாயிரத் திவ்விய பிரபந்தம் (Naalaayira thivya prapantham)**

வைணவ மத முதற்கடவுளான திருமாலின் புகழ் பாடவும் பல்வேறு இலக்கியங்கள் தமிழில் எழுந்தன. இந்த இலக்கியங்கள் தமிழின் மணி மகுடங்களாக அமைந்தன.

பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பிரபந்தங்களை நாதமுனி என்பவர் நாலாயிரத் திவ்விய பிரபந்தம் எனத் தொகுத்தார்.

நாலாயிரம் என்பது பாசுரங்களின் எண்ணிக்கையைக் குறிக்கும். திவ்விய பிரபந்தம் என்பது, தெய்வத்தின் திவ்விய குணங்களைப் போற்றும் பிரபந்தங்களின் தொகுப்பு என்று பொருள் தரும் . இதைத் திராவிட வேதம் என்பர்.

ஸ்ரீ ஸ்ரீ பெரியாழ்வார் அருளிச்செய்த திருப்பல்லாண்டு
(1-12)

ஸ்ரீ ஸ்ரீ பெரியாழ்வார் அருளிச்செய்த ஸ்ரீ பெரியாழ்வார் திருமொழி
(13-473)

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை (474-503)

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த நாச்சியார் திருமொழி
(504-646)

ஸ்ரீ குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த பெருமாள் திருமொழி
(647-751)

திருமழிசைப்பிரான் அருளிச்செய்த திருச்சந்த விருத்தம்
(752-871)

ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த திருமாலை
(872-916)

ஸ்ரீ தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிச்செய்த திருப்பள்ளியெழுச்சி
(917-926)

திருப்பாணாழ்வார் அருளிச் செய்த அமலனாதிபிரான்
(927-936)

ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச்செய்த கண்ணி நுண்சிறுத்தாம்பு
(937-947)

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி
(948-2031)

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த திருக்குருந்தாண்டகம்
(2032-2051)

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த திருநெடுந்தாண்டகம்
(2052-2081)

ஸ்ரீ பொய்கையாழ்வார் அருளிச்செய்த முதல் திருவந்தாதி
(2082-2181)

ஸ்ரீ பூதத்தாழ்வார் அருளிச்செய்த இரண்டாம் திருவந்தாதி
(2182-2281)

ஸ்ரீ பேயாழ்வார் அருளிச்செய்த மூன்றாம் திருவந்தாதி
(2282-2381)

திருமழிசைபிரான் அருளிச்செய்த நான்முகன் திருவந்தாதி
(2382-2477)

ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தம் (2478-2577)

ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாசிரியம் (2578-2584)

ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த பெரிய திருவந்தாதி
(2585-2671)

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த திருவெழுகூற்றிருக்கை
(2672)

திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த சிறிய திருமடல்
(2673-2712)

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமடல்
(2713-2790)

ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி (2791-3892)

திருவரங்கத்து அமுதனார் அருளிச்செய்த இராமாநுச நூற்றந்தாதி
(3893-4000)

## இலக்கண நூல்கள்

ஒரு மொழிக்குச் சிறப்பையும், அழகையும் கொடுப்பது இலக்கணம் ஆகும். உயிருள்ள எந்த மொழிக்கும் இலக்கணம் இன்றி யமையாதது. மொழி சிதைந்து அழகு குன்றிச் சீர் கெட்ட நிலையை அடையாது காப்பது இலக்கணமாகும்.

தமிழ் மொழி, இயற்றமிழ், இசைத்தமிழ் மற்றும் நாடகத் தமிழ் என மூன்று பிரிவுகளை உடையது. இவையே முத்தமிழ் என அழைக்கப்படக் காரணமாக விளங்குகிறது. நம் முன்னோர் முத்தமிழின் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே இலக்கணம் அமைத்தனர். அகத்தியம் முத்தமிழுக்கும் உரிய இலக்கண நூல் என்பர். இருப்பினும், பொதுவாக தமிழ் இலக்கணம் என்பது இயற்றமிழ் இலக்கணத்தைக் குறிப்பதாயிற்று.

அகத்தியம் (Akaththiam)

தொல்காப்பியம் (Tholkappiam)

யாப்பெருங்கலக் காரிகை (Yapperungalak Karikai)

தண்டியலங்காரம் (Thandi Alangaram)

இலக்கணச் சுருக்கம் (Ilakkana Surukkam)

ஐந்திலக்கணம் தொன்னூல் விளக்கம் (Thonnool  Vilakkam)

சிந்துப்பாவியல் (Sinduppaviyal)

அகப்பொருள் விளக்கம் (Agaporul Vilakkam)

களவியல் என்னும் இறையனார் அகப்பொருள் (Iraiyanar Akapporul)

சிதம்பரப்பாட்டியல் (Chidambarapattiyal)

நேமிநாதம் (Neminatham)

நன்னூல் (Nannool)

சூடாமணி நிகண்டு (Sudamani Nigandu)

வடமலை நிகண்டு (Vadamalai Nigandu)

கம்ப இராமாயணம் (Kamba Ramayanam)

ஏரெழுபது (Erezhupzthu)

திருக்கை வழக்கம் (Thirukkai Vazhakkam)

சரஸ்வதி அந்தாதி (Saraswathi Anthaathi)

சடகோபர் அந்தாதி (Sadakobar Anthaathi)

சிலையெழுபது (Silaiyelupathu)

**அவ்வையார்**

அவ்வையார் என்ற பெயரில் நான்கு புலவர்கள் பல்வேறு காலக்கட்டங்களில் இருந்திருப்பதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர

முதலாவதாக வாழ்ந்தவர் சங்ககால அவ்வையார். இந்த அவ்வையார் சங்க இலக்கியத்தில் 59 பாடல்களைபாடியுள்ளார்.

விநாயகர் அகவலைப் பாடியவர் இரண்டாவது அவ்வையார்.

மூன்றாவது அவ்வையார், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி போன்ற நீதி நூல்களைப் பாடியவர்.

நான்காவது அவ்வையார் தனிப்பாடல்கள் மிகுதியாகப் பாடியவர்..

அவ்வையாரின் நூல்களில் 7 மட்டுமே கிடைத்துள்ளன. அவை :

ஆத்திசூடி (Atticcuti)

கொன்றை வேந்தன் (Konraiventan)

நல்வழி (Nalvazhi)

மூதுரை (Moodurai)

ஞானக்குறள் (Gnanakural)

விநாயகர் அகவல் (Vinayakar Akaval)

நாலு கோடிப் பாடல்கள் (4 Kodi Padalkal)

**சிற்றிலக்கியங்கள்**

திரட்டு நூல்கள்

ஒட்டக் கூத்தர் நூல்கள்

அருணகிரி நாதர் நூல்கள்
ஸ்ரீகுமர குருபரர் நூல்கள்
தாயுமானவர் நூல்கள்
இராமலிங்கர் நூல்கள்
பாரதியார் நூல்கள்
பாரதிதாசன் நூல்கள்
நாமக்கல் கவிஞர் நூல்கள்
அமரர் கல்கியின் நூல்கள்

நன்றி : *tamil Surangam.com*

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும் :

– பாரதியார்

## வேரும் விழுதுகளும்

அமரத்துவம் அடைந்த ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி இராசாம்பிகை இராசலிங்கம் அவர்களின் நினைவாக வெளிவருகின்ற இம்மலரில் இத்தொகுப்புக்கு தலையங்கமாக மேலே தரப்பட்டிருக்கும் மகுடத்துக்கு முதலில் சிறு விளக்கம்...

இற்றைக்குச் சுமார் 80 ஆண்டுகள் முன் அதாவது இரண்டாவது உலகமகாயுத்த காலத்துக்கு முன்னதாக வேலணை மேற்குக் கிராமத்தை எடுத்துக் கொண்டால் அயல் கிராமத்தில் தானும் திருமணபந்தம் வைத்துக் கொள்ளார்கள். இக்கிராமம் அல்ல எல்லாமட்டமுமே, இவ்வாறான ஈழத்தமிழன் மேற்குலக வளர்ந்த நாடெங்கும் பரவி இன்று அவனது மூன்றாம் சந்ததியினர் கொரோணாகால இக்கட்டான காலத்தில் வைத்தியர் , தாதியரென்ற மட்டத்தில் மட்டுமல்ல சகல துறைககளிலும் சமுதாய வளர்ச்சியில் பங்குகொண்டு உலகிடை ஒரு அடையாளம் காணுமினமாக கணிக்கப்படுவது தெரிந்த உண்மை. இதே சந்ததி நாளைக்குத் தனக்குத்தான் கேட்கப்போகின்றது ”நான் யார்?” என்று. இவ்வாறான வினா ஆன்மீக மட்டத்தில் ஒரு ஆப்தவாக்கியம். ஆனால் இது தன் சந்ததி பற்றி நிற்பது. ஆகவேதான் இவ்வாறான நினைவஞ்சலிப் பதிப்புக்களில் தடயங்களாக விட்டுச்செல்லு முகமாக அன்று வைத்தியநாதர் செல்லையா என்றும் கதிரவேல் சண்முகம் என்றும் வேலணைப்பதி வாழ் வேர்களின், விழுதுகளின் இனங்காணலாக வருவதே பின்வரும் விளக்கமாகும். அல்லாமலும் தென்புலத்தார் வணக்கத்து பூசைத்திரவியங்கள் என்பதும் எம் கருத்தாக இருக்கிறது.

அமரர் இராசாம்பிகை இராசலிங்கம் அவர்கள் தன் மாணவர்களை மட்டுமின்றி மக்களையும் நல்ல முறையில் வளர்த்துக் கடும் முயற்சியாலும், ஊக்கத்தாலும், இறைபக்தியாலும் அவர்கள் பெயர் சொல்லுமளவுக்கு உயர்த்திய பெருமை பெற்றவர். நாட்டுப் போர் சூழ்நிலையால் புலம் பெயர்ந்து பல நாடுகளில்

எம்மவர்கள் வாழ்ந்தாலும் மண் வாசனையுடன் , விடா முயற்சியோடு , கடின உழைப்புடன், பண்புள்ளவர்களாக வாழும் பலரில் அன்னாரின் குடும்பத்தாரும் விதி விலக்கானவர்கள் அல்லர். அதேபோல மருமக்களும், பேரப்பிள்ளைகளும் உயர் நிலை கண்டு தன் முயற்சியாலும் , இறை மீது கொண்ட பக்தியாலும் கிடைத்த பலனைக் கண்டு மகிழ்ந்திருந்தார். முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு இவரின் வாழ்க்கை ஒரு உதாரணம் என்றால் மிகையாகாது.

அந்தவகையில் அமரரைப் பற்றிய பல விடயங்கள் இந்த நினைவு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டாலும் மேலும் சில விடயங்களை குறிப்பிடுவது அவவின் சந்ததி பிற்காலத்தில் அவற்றை அறிவதற்கு உதவியாக இருக்கும் என்பதால் அவரின் குடும்ப அங்கத்தவர்கள் பற்றிய சில தகவல்களைப் பார்ப்போம்.

சிறப்பனை முருகன் ஆலயத்தின் காணிக்குச் சொந்தகாரரான வைத்தியநாதரின் புதல்வர் அமரர் செல்லையா அவர்கள் கோவில் முதலாளியாக ஆலயத்தை நிர்வகித்து வந்தார். அவரின் மூத்த மகனான அமரர் சோமாஸ்கந்தன், தவமணியை மணந்து, ஆலயத்தின் ஆயுள் காலத் தலைவராக இருந்து ஆலயத் திருவிழாக்களிலும் , விசேட பூசைகளிலும் தனது இயல்பான, இனிமையான குரலில் தேவார, தோத்திரங்கள் பாடியும் திருத்தொண்டும் செய்து வந்தார். அடுத்த மகள் பூம்பாவை, சங்கீத பூஷணம், ஆசிரியர் குலசேகரம்பிள்ளையை மணந்து சங்கீதக் கலையை வளர்த்து அடுத்த சந்ததிக்கும் பயிற்றுவித்து நிறைவு கண்டார். மகன் சிவசாமி இராசமணியை மணந்து குடும்பத்தாருடன் சமயத் தொண்டாற்றி நிறைவு கண்டார்... இவர்களின் சகோதரிதான் இந்த மலருக்குரியவரான அமரர் இராசாம்பிகை.

அமரர் இராசாம்பிகை வேலணை மேற்கில் வியாபார விற்பனராக இருந்த காலம் சென்ற சண்முகம் தெய்வானை இணையரின் மகனான கணக்கியல் துறையில் ஆர்வமும், ஆற்றலும் கொண்ட இராசலிங்கம் அவர்களுடன் திருமண

பந்தத்தில் இணைந்து கொண்டார். பெருந் தோட்ட தொழில் துறை நிறுவனமொன்றில் காரியாலயப் பொறுப்பாளராக முப்பதாண்டுகளுக்கு (30) மேலாக கடைமையாற்றி தொடர்ந்து தலை நகர் கொழும்பில் பிரபலமான வியாபார நிறுவனங்களுக்கு கணக்காளராகப் பதினைந்து (15) வருடங்கள் கடிமையாற்றிக், கனடாவுக்குக் குடி பெயர்ந்து அங்கும் சில வருடங்கள் வியாபார நிறுவனங்களில் கடைமையாற்றி இன்று 98 ஆவது வயதிலும் கணினி மூலமாக தனது பேரர்களுக்கு இ–மெயில் மூலம் தொடர்ப்பு கொண்டும், தனது எழுத்தாற்றலை வளர்த்துக் கொண்டும் , கணினி, வானொலி மூலம் உலகவிடயங்களை அறிந்து கொண்டும், மக்கள், மருமக்களுக்கு ஆலோசகராகவும் கனடாவில் வாழ்கின்றார். இவர்களால் நன்கு பட்டை தீட்டப்பட்டு வார்க்கப்பட்ட இராஜகோகிலம், இராஜாம்பிகை, இராஜசேகரன், இரஞ்சிதலெட்சுமி ஆகியோர் பற்றியும் அவர்களின் குடும்பத்தார் பற்றியும் பார்ப்போம்.

ஒய்வு நிலை American Express Bank, IT Project Manager இராஜகோகிலம் (B.Sc., Dip – Comp. Prog), வேலணை மேற்கில் காலம்சென்ற அரசாங்க பிரதம கணக்காளரான சே.க. சண்முகம்பிள்ளை, இரட்சண்யதேவி இணையரின் சிரேஷ்ட மகன், ஒய்வு நிலை American express Bank, Finance Manager ஸ்கந்தகுமாரனை (B.Sc., PGDE, CIMA) கரம் பிடித்து, இருவரும் இலங்கையிலும், பல வருடங்கள் வெளிநாடுகளிலும் ஆசிரிய சேவையாற்றி, தற்பொழுது அமெரிக்காவில் வாழ்கின்றனர். அவர்களின் மூன்று பிள்ளைகளும் பிரதீப், சங்கீதா, கிரிஷாந்த் ஆவர். பிரதீப் (M.Sc. Eng., MBA), Healthcare Corp. Devp. Manager, வேலணை வடக்கை சேர்ந்த பிரபல உயர்தர கணித ஆசிரியரான பாலா யோகநாதன் சித்திரா தம்பதிகளின் புதல்வி DR.லாவண்யாவை ( HPB Transplant Surgery Fellowship - Mayo Clinic) கரம் பிடித்து அவர்களின் மகள் மைராவுடன் அமெரிக்காவிலும், சங்கீதா (B.Sc., M.Sc. Fin. ) Executive Director of Investment banking, கல்யாண் அவர்களை (Mtech. Eng., MSc. Fin.)

Portfolio Manager of Investment mgmt. Banking கரம் பிடித்து அவர்களின் பிள்ளைகள் ரூவ், சியோனா ஆகியோருடன் லண்டனிலும், Face Book நிறுவன பொறியியலாளர் கிரிஷாந்த் (B.Sc. Eng.) மருந்தகத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற பிரேடாவை (B. Sc., PharmD) Clinical Pharmacist கரம் பிடித்து அவர்களின் பிள்ளைகள் நோலன், லானா ஆகியோருடன் அமெரிக்காவிலும் வாழ்கின்றனர்.

ஒய்வு நிலை, பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை இராஜாம்பிகை (Dip-in E.C.E) யாழ்/நாயன்மார்க்கட்டு, நல்லூர் விவசாயத்துறை விற்பனர் காலம் சென்ற திருநாவுக்கரசு அமிர்தவல்லி இணையரின் மகன் ஒய்வு நிலை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நிறுவனரும், முதலாவது பீடாதிபதியுமான, கலாநிதி கமலநாதனை (PhD) கரம்பிடித்து இருவரும் இலங்கையில் கல்வி துறையில் பல காலம் சேவையாற்றி தற்பொழுது அவுஸ்திரேலியாவில் வாழ்கின்றனர். அவர்களின் இரு பிள்ளைகள் செழியன், துளசி ஆவர். செழியன்( M.Sc. Eng.) Australia Sydney water ல் பொறியியலாளராக கடைமை ஆற்றுகின்றார். Owner & Operator of Cake & Pastry Inc. (Dip-in Cake & Pastry, Dip- in E.C.E.), கொழும்பு பிரபல சட்டத்தரணி சிவபாதசுந்தரம் வான்மதி இணையரின் சிரேஷ்ட மகன் ஆதித்தனை (BBM) Manager of Peter & Stevens Inc. கரம் பிடித்து அவர்களின் பிள்ளைகள் கைலேஸ், ஷிவன்யா, ஆதிரன் ஆகியோருடன் அவுஸ்திரேலியாவில் வாழ்கின்றனர்.

இலங்கையில் அரசாங்கப் பொறியியல் திணைக்களத்தில் Engineering Assistant ஆக கடைமை ஆற்றி, கனடாவில் கணினி துறையில் கடைமை ஆற்றும் இராஜசேகரன் (Bsc. Eng. & Dip -in Tech.), வேலணை வடக்கை சேர்ந்த முன்னாள் கொழும்பு பிரபல வர்த்தகர் விஸ்வலிங்கம் இமயவல்லி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி, இலங்கையில் ஆசிரியையாகச் சேவையாற்றிக்,

கனடாவில் கணக்காளராகக் கடமை ஆற்றும் பிரேமலதாவை (B.sc, Dip -in Acct.) கரம் பிடித்து அவர்களின் மகன் பிரவீன் (B.Sc., M.Sc.) கனடாவின் பிரபலமான McGill University ல் மருத்துவத் துறையில் முதலாம் வருடத்தில் கற்கை நெறியை ஆரம்பிக்கின்றார். .

இலங்கையில் ஆங்கில ஆசிரியையாகச் சேவையாற்றி, கனடாவில் Toronto Direct School Board ல் ஆரம்பக் கல்வி ஆசிரியையாகக் கடைமை ஆற்றும் இரஞ்சிதலெட்சுமி (Dip-in English & Dip -in ECE) வேலணை மேற்கில் பண்டிதாசிரியர் அமரர் வை. க. சிவகடாட்ச்சம்பிள்ளை, திலகவதி இணையரின் சிரேஷ்ட மகன், இலங்கையில் பயிற்றப்பட்ட கணித ஆசிரியராக சேவை ஆற்றி, கனடாவில் Real Estate வியாபார துறையில் கடைமையாற்றும் கதிர்காமநாதனை (B.A) கரம் பிடித்து, அவர்களின் பிள்ளைகளான கீர்த்தனா (B. Sc., B. Ed) Druham School Board இல் ஆசிரியையாக கடமையாற்றுவதுடன், மகன் சேயோன் Hamilton McMaster பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டு பொறியியல் துறையில் கற்றுக் கொண்டிருக்கின்றார்.

அமரர் இராசாம்பிகையின் ஆசிர்வாதம் தொடர்ந்து அவரின் சந்ததிக்கு கிடைத்து மேலும் அமரர் அவர்களின் குடும்பத்தார் ஆற்றி வரும் சமூக , சமய பணிகள் தொடர்வதற்கு எப்பொழுதும் வல்லமை கிடைக்க எல்லாம் வல்ல சிற்பனை வேலவன் துணை புரிய மனம், மொழி, மெய்களால் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தார்.

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு அமரர் இரசாம்பிகை இராசலிங்கம் அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து நேரில் வருகை தந்து ஆறுதல் கூறியோர்க்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோர்க்கும், முகப்புத்தகம் (Face Book), புலனம் (WhatsApp), பற்றியம் (Messanger) மூலம் அனுதாபச் செய்திகள், கண்ணீர் அஞ்சலிகள் அனுப்பி அனுதாபம் தெரிவித்தோர்க்கும், மரண அறிவித்தல் ஊடாக அனுதாபம் தெரிவித்தோர்க்கும், உணவு, சிற்றுண்டி வழங்கியோர்க்கும், மூன்று நாட்களிலும் ZOOM (விரிவரங்கம்) மூலம் பங்கு பற்றி தேவாரதோத்திரங்கள் இசைத்தவர்கள், கண்ணீர் அஞ்சலி வழங்கியோர், பஜனை பாடியோர் அனைவருக்கும், மலர் மாலைகள், மலர் கொத்துக்கள், மலர் வளையங்கள் அனுப்பியோர்க்கும், இறுதிக் கிரியையிலும், அந்தியேட்டி கிரியையிலும் பங்கு கொண்ட அந்தணக் குருமாருக்கும், பண்ணிசை பாடியோருக்கும், இறுதிக்கிரியை மண்டப நிர்வாகத்தினருக்கும், தகனக்கிரியை மண்டபம் வரை வந்தவர்க்கும், முதியோர் இல்ல நிர்வாகத்தினருக்கும், நினைவு மலரை அழகாக வடிவமைத்தவர்க்கும், மலருக்கு இரங்கலுரை வழங்கியோர்க்கும், அன்னாரின் ஞாபகார்த்தமாக கிளிநொச்சி காப்பகத்தில் உள்ள விசேட தேவைக்குட்பட்ட பிள்ளைகளுக்கு சிறப்புணவு வழங்கியோர்க்கும், எங்கள் இதய பூர்வமான நன்றிகளை கூறுகின்றோம்.

வணக்கம்.

கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# Nirvana Shatakam

Nirvana Shatakam also known as Atma-Shatakam.

The song of the self by Adi Shankara 788-820ce. The great Adi Shankara of the eight century summarized the entirety of advaita vedanta in six stanzas.

When a young boy of eight years, while wandering in the Himalayas, seeking to find his guru, he encountered a sage who asked him, “who are you? The boy answered with these stanzas, which are known as Nirvana Shatakam or Atma Shatakam. Nirvana is complete equanimity, peace, tranquility, freedom and joy. Atma is true self. The boy was talking to was Swami Govindapada Acharya, who was, indeed, the teacher he was looking for. These few verses can be of tremendous value to progress in contemplation practices that lead to self-realization.

# வம்ச விருட்சம்


*வைத்தியநாதர் + *செல்லமுத்து
*பராசக்தியம்மா + *நாகலிங்கம்
*நாகரத்தினம்
*ஆறுமுகம்
*நடராஜா
*சௌந்தரநாயகி
*கணபதிப்பிள்ளை
*கந்தையா + *முத்துப்பிள்ளை
*பொன்னம்பலம்
*மனோன்மணி
*கமலாம்பிகை
*வாலாம்பிகை
*சிவகடாட்சம்பிள்ளை
*காமாட்சி
*செல்லையா + *பூரணம்
*சிவசம்பு + *இரத்தினம்மா
*கதிரவேலு + .
*சின்னத்தங்கம் + *அம்பலவாணர்
*சண்முகம் + *தெய்வானை
*இராசலெட்சுமி
*வைத்தியநாதன் + *சிவபாக்கியம்
1.
2.
3.
*சொர்ணலிங்கம் + *மகேஸ்வரி
ஜெயபாலன்
*மாசிலாமணி + *பரமேஸ்வரி
மாசிலாவதனி
மணிமாலா
மணிமலர்
*சிவபாக்கியம் + *கார்த்திகேசு
*தேவதாசன்
இராசலிங்கம்
*கனகசபை + திருக்கேதீஸ்வரி
வாசுகி
வாசுதேவன்
வசந்தி
வாகீஸ்வரி
வாசவன்
*சோமாஸ்கந்தன் + *தவமணி
ஸ்கந்தஸ்ரீ
ஸ்கந்தமணி
*பூம்பாவை + *குலசேகரம்
குலபூசணி
குலபூபதி
குலசேகரி
குலநாயகி
குலசுந்தரி
குலமுருகன்
*இராசாம்பிகை
*சிவசாமி + *இராசமணி
மகாபவானி
மோகனபாலினி
ஸ்ரீகணேஸ்வரன்
இராஜகோகிலம் + ஸ்கந்தகுமாரன்
பிரதீப் + லாவண்யா
மைரா
சங்கீதா + கல்யாண்
றூவ்
சியோனா
கிரிசாந்த் + பிரேடா
நோலன்
லானா
இராஜாம்பிகை + கமலநாதன்
செழியன்
துளசி + ஆதித்தன்
கைலேஷ்
ஷிவன்யா
ஆதிரன்
இராஜசேகரன் + பிறேமலதா
பிரவீன்
இரஞ்சிதலெட்சுமி + கதிர்காமநாதன்
கீர்த்தனா
சேயோன்
* – அமரர்கள்

## நிர்வாண ஷடகம்

நான்  இறப்பால் கட்டுண்டவனுமன்று,

நான் பயத்தால் பீடிக்கப்பட்டவனுமன்று,

நான் சாதியில் அகப்பட்டவனனுமன்று,

எனக்கு தாயும் இல்லை, தந்தையும் இல்லை,

பிறப்பும் இல்லை, எனக்கு உறவும் இல்லை,

நட்பும் இல்லை,,குருவும் இல்லை,சீடனும் இல்லை

நான் என்றும் ஆனந்தமான தூயசிவம் .

- ஆதிசங்கரர்

## Nirvana Shaktam

I do not have fear of death, as I do not have death. I have no separation from my true self, no doubt about my existence, nor have I discrimination on the basis of birth. I have no father or mother, nor did I have a birth. I am not the relative, nor the friend, nor the guru, nor the disciple. I am indeed, That eternal knowing and bliss, Shiva, love and pure consciousness.


- Adhi Sankara


Siyona








A teacher
affects
eternity;
she can
never tell
where her
influence stops.
- Henry Adaws


It takes a big
heart
to shape
little
minds